Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 84
வெள்ளிக்கிழமை 18 பெப்ரவரி 2022
மாசி 06 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16
விலை: 30/=

கொரோனா
நேற்று 1,235
மொத்தம் 6,33,051

உயிரிழப்பு
நேற்று 27
மொத்தம் 15,926

## தீர்மானங்களின் மூலம் கட்டுப்படுத்த முடியாது

### அறிக்கைகளும் எமக்குப் புதிதல்ல வெளிவிவகார அமைச்சர் தெனாவட்டு

**கொழும்பு, பெப்ரவரி 18**
**ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளரின் எழுத்துமூல அறிக்கை இலங்கைக்குச் சவாலாக அமையாது. இந்த அறிக்கை எமக்குப் புதிய விடயம் அல்ல. அறிக்கைகள் அல்லது தீர்மானங்கள் மூலமாக இலங் கையைக் கட்டுப்படுத்த முடி யாது.**



15

## ஐ.நா. அழுத்தங்களை எதிர்கொள்ளத் தயார்

### டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு

கொழும்பு, பெப்.18
ஜெனிவாவில் இந்த முறை இலங்கைக்கு எதிராக எந் தப் பிரேரணைகளும் கொண்டுவரப்படமாட்டா. ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இந்த முறை இலங்கைக்கு எதி ராக ஏதாவது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட் 15

## கொரோனா: பெண் சாவு!

யாழ்ப்பாணம், பெப்.18
யாழ்ப்பாணம், குப்பிளா னைச் சேர்ந்த 65 வயதுப் பெண் ஒருவர் கொரோ னாத் தொற்றால் உயிரிழந் துள்ளார்.
கனடாவைச் சேர்ந்த இவர் குப்பிளானில் தங்கியிருந் துள்ளார். கடந்த 14ஆம் திகதி இவர் திடீரென மயக்கமுற்று வீழ்ந்ததை அடுத்து யாழ்ப்பாணம் போதனா 15

## கடப்பாட்டை நிறைவேற்ற தவறியது இலங்கை அரசு!

### முன்னாள் விசேட அறிக்கையாளர் தடாலடி

கொழும்பு, பெப்.18
இலங்கையில் பாதிக்கப்பட்ட தரப்பினர் பொறுப்புக்கூறலை நிலைநாட்ட வேண்டும் என்று கோரவில்லை என்று ராஜபக்ச அரசாங்கம் கூறுவதில் எந்த உண்மையும் இல்லை. பாதிக் கப்பட்ட தரப்பினரின் நீதிக்கான கோரிக்கை மிகவும் வலுவாகக் கருத்திற் கொள்ளப் 15

முச்சந்தி முரளி



"திரும்பவும் பெற்றோல் விலையை ஏத்துங்கோ என்று அவர் கேக்கிற மாதிரி கேக்பாராம், இவை கூட்டுற மாதிரிக் கூட்டுவினமாம். நல்ல நாடகம் தான் நடக்குது"

## ஒன்றியம் அமைக்கக் கோரி கதவை மூடிப் போராட்டம்

### யாழ். பல்கலைச் செயற்பாடுகள் ஸ்தம்பிதம்



யாழ்ப்பாணம், பெப்.18
யாழ்ப்பாணம் பல் கலைக்கழக மாணவர் ஒன்றியத்தை அங்கீக ரிக்க வேண்டும் என்று கோரி, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நேற்று மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட னர்.
பல்கலைக்கழக நுழை வாயிலை மூடி 15

## போராட்டத்தால் பரீட்சைக்குத் தடை

யாழ்ப்பாணம், பெப்.18
யாழ்ப்பாணம் பல்கலைக்கழ கத்தில் நேற்று மாணவர்கள் மேற்கொண்ட போராட்டத் தால் நேற்று பல்கலைக்கழ கத்தில் நடைபெறவிருந்த பரீட்சைகள் தடைப்பட்டுள் ளன. 11

## அப்பாவிகளை அச்சுறுத்தவே பயங்கரவாதத் தடைச்சட்டம்!

### கொழும்புப் பேராயர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.18
பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண் டும் அல்லது முழுமையாக மாற்றப்பட வேண்டும். ஏனெ னில் இந்தப் 15

## ஆசை வார்த்தை பேசி ரூபா. 250,000 அபேஸ்!

### வட்டுக்கோட்டையில் இரு சம்பவங்கள்

யாழ்ப்பாணம், பெப்.18
தொலைபேசியில் தொடர்பு கொண்டவர்களின் ஆசை வார்த்தைகளை நம்பி யாழ்ப் பாணத்தில் இருவர் பெருந்தொ கைப் பணத்தை இழந்துள்ள னர். இது தொடர்பில் பொலி ஸாரிடம் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.
வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கரத்தை - துணைவி மற்றும் சித்தனன் கேணி ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவரே ஏமாற்றப்பட் டுள்ளனர். இவர்களிடம் இருந்து 2 லட்சத்து 11

## தீக்காயத்தால் பெண் மரணம்

கொழும்பு, பெப்.18
தீக்காயங்களுக்கு உள் ளாகி யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவந்த குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன் தினம் உயிரிழந்துள் ளார்.
யாழ்ப்பாணம், ஆறு கால்மடத்தைச் 15

## எரிபொருள் விலையை உடனே அதிகரியுங்கள்

### மத்திய வங்கி ஆளுநர் வலியுறுத்து

கொழும்பு, பெப்.18
எரிபொருள்களின் விலைகளை அதிகரிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை 15

## கச்சதீவு திருவிழாவில் பக்தர்களுக்குத் 'தடா'

கொழும்பு, பெப்.18
அடுத்தமாதம் நடைபெற வுள்ள கச்சதீவு அந்தோனி யார் ஆலயத் திருவிழாவில் பக்தர்கள் கலந்துகொள்ளத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
நேற்று மயிலிட்டித் துறைமுகத் தின் இரண்டாம் கட்ட அபிவி ருத்திப் பணிகளை 11

## 'குற்றவியல்நீதி' கோணத்தில் மீள ஆராயப்படும் தரவுகள்!

### ஐ.நா. மனித உரிமைகள் அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு, பெப்.18
ஐ.நா. மனித உரிமைகள் சபை யின் தீர்மானத்தின்படி உரு வாக்கப்பட்டுள்ள 'இலங்கை பொறுப்புக்கூறல் செயற்றிட்ட மானது', பொறுப்புக்கூறல் விவகாரத்துடன் தொடர்புடைய தகவல்களை ஐ.நா. மனித உரி மைகள் ஆணையாளரால் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கை யில் உள்ளடக்க வழிவகுக்கும் அதேவேளை, ஐக்கிய 11

## போர்க்குற்றவாளிகளுக்கு 'தடை விதிப்பு' சரியானதே!

### சர்வதேச நீதிக்கான கனேடிய கூட்டாண்மையின் ஆய்வாளர் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப்.18
இலங்கையில் போர்க்குற்றங்களி லும், மனிதஉரிமை மீறல்களிலும் ஈடு பட்டவர் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சம்பள உயர்வு கோரி துண்டறிக்கை விநியோகம்

யாழ்ப்பாணம், பெப்.18

அரச ஊழியர்கள் தொடர்பான பல்வேறு கோரிக்கைகளை உள்ளடக்கிய துண்டறிக்கை மாவட்டச் செயலகத்தின் முன்பாக நேற்று விநியோகிக்கப்பட்டன.

ஒன்றிணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் மத்திய நிலையம் மற்றும் தொழிலாளர் போராட்ட மத்தியநிலையத்தின் ஏற்பாட்டில் இவை விநியோகிக்கப்பட்டன.

அரச ஊழியர்களின் சம்பளத்தை 15ஆயிரம் ரூபாவால் அதிகரிக்குமாறும், பதவி உயர்வு முறைமையும் கடமைப் பட்டியலும் அடங்கிய அபிவிருத்தி உத்தியோகத்தர் புதிய சேவைகள் யாப்பைத் தயாரிக்குமாறும், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் புதிய சேவைகள் யாப்பொன்றை தயாரிக்குமாறும், சகல அபிவிருத்தி உத்தியோகத்தர்களதும் பறிக்கப்பட்ட சேவைக் காலத்தை நிரந்தர சேவையில் இணைக்கக் கோரியும், 2016இன் பின்பு அரச சேவைக்கு வந்த அனைவரதும் பறிக்கப்பட்ட ஓய்வூதிய உரிமையை மீண்டும் வழங்குமாறும் கோரி இந்த துண்டறிக்கை விநியோகம் மேற்கொள்ளப்பட்டது. (வ-இ)

# இறக்குமதி வரியை நிறுத்தினால் எரிபொருள் விவகாரத்துக்கு தீர்வு

## அமைச்சர் ஆலோசனை

**கொழும்பு, பெப்.18**

**எரிபொருள் இறக்குமதியின் போது, அறவிடப்படும் வரிகள் அனைத்தையும் தற்காலிகமாக இரத்துச்செய்தால், எரிபொருளின் விலையை அதிகரிப்பதற்கான தேவை ஏற்படாது என்று, வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில நிதியமைச்சுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் நிறுவனத்துக்கும், இலங்கை மின்சார சபைக்கும் கடன் அடிப்படையில் எரிபொருளை விநியோகப்பதால் பெரும் நிதி நெருக்கடியை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எதிர்கொண்டுள்ளது.

எரிபொருள் விலையேற்றம் தொடர்பில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முன்வைத்துள்ள யோசனையை நிதியமைச்சிடம் முன்வைத்துள்ளேன்.

நிதி நெருக்கடி நிலைமையை முகாமைத்துவம் செய்ய கூட்டுத்தாபனம் நடவடிக்கைகளை மேற்கொள்ளதிட்டங்களைமுன்வைப்பது நியாயமானது.

எரிபொருள் இறக்குமதியின்போது அறவிடப்படும் வரிகள் அனைத்தையும் தற்காலிகமாக நீக்கினால், எரிபொருளின் விலையை அதிகரிப்பதற்கான தேவை கிடையாது.

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டால் பொது மக்கள் பாதிக்கப்படுவார்கள்.

விலை அதிகரிக்காவிடின் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நிதி நெருக்கடியை எதிர்க்கொள்ளும்.

இவ்விரு பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண அரசு சிறந்த தீர்மானத்தை முன்னெடுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

## தடையில்லா மின்சாரத்தை வழங்க தேவையான எரிபொருளைத் தருக

### ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, பெப். 18

தடையில்லா மின்சாரத்தை வழங்குவதற்கு தேவையான எரிபொருளை வழங்குமாறு எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

தொழிற்சங்கவாதியான ஆனந்த பாலித, ஜனாதிபதி இந்த விடயத்தில் தலையிட்டு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உட்பட சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்குவதை உறுதிசெய்ய வேண்டும் என வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் எரிபொருள் இருப்புக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது. தற்போது எரிபொருள் இறக்குமதி செய்யப்படாமல் பொதுமக்கள் ஏமாற்றப்படுகின்றனர். மின்சாரத்தை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தி விசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. வேலைநிறுத்தத்தை நசுக்குவதற்காக மாத்திரம் அதனை அத்தியாவசிய சேவையாக மாற்றக்கூடாது. வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு தடையில்லா மின்சாரம் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில் இது அத்தியாவசிய சேவையாக மாற்றப்பட வேண்டும் -என்றார். (ம)



## மன்னாரில் பல திட்டங்கள் நோர்வே பிரதிநிதி ஆராய்வு

மன்னார், பெப்.18

நோர்வே நாட்டின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி டிரைன் ஜோரான்லி எஸ்கெடல், மன்னார் மாவட்டத்துக்கு நேற்று வருகை தந்தார்.

மன்னார் மாவட்டச் செயலர் ஏ. ஸ்ரான்லி டிமெல்லுடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட அவர், மன்னாரில் இடம் பெறும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்தார்.

குறிப்பாக மாவட்டத்தில் பெண்களின் நிலை குறித்து கலந்துரையாடினார்.

அத்துடன் இந்திய மீனவர்களின் பிரச்சினை, பறவைகள் சரணாலயம் ,காற்றாலை மின்சாரம், கழிவு மீன் திரவ உரம் தயாரிப்பு, மன்னார் மாவட்ட பொது மருத்துவமனை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடினார். (ஒ-4-56)

## 10 அரச நிறுவனங்கள் மின்சாரத்தில் முழுமை

கொழும்பு, பெப். 18

கொழும்பிலுள்ள பல முன்னணி நட்சத்திர விடுதிகள் உட்பட 10 அரச நிறுவனங்கள் தமது மின் தேவையை தாமே நிவர்த்திசெய்யும் நிலைக்குச் சென்றுள்ளன என்று பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாளாந்தம் அதிகளவான மின்சாரம் பயன்படுத்தப்பட்டுவரும் நிலையில், அதனைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள பல முன்னணி நட்சத்திர விடுதிகள் உட்பட 10 அரச நிறுவனங்கள் தமது மின் தேவையை தாமே நிவர்த்திசெய்யும் நிலைக்குச் சென்றுள்ளன. குறித்த நிறுவனங்கள் தாமாகவே முன்வந்து மின்பிறப்பாக்கிகளை நிறுவி அதனைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளன.

மின்சாரம் தொடர்பில் ஏற்பட்டுள்ள நிலைமையை தேசிய பிரச்சினையாக கருதி அந்த நிறுவனங்கள் செயற்பட்டிருப்பது முக்கிய நடவடிக்கையாக பார்க்கப்படுகின்றது - என்றார். (ம)


## போக்குவரத்துச் சேவைகள் சங்கம் ஆரம்பம்

வவுனியா, பெப். 18

நெளுக்குளம் பகுதியில் பதியப்படாத பேருந்து உரிமையாளர்களால் "மணிகண்டன் போக்குவரத்துச் சேவைகள் சங்கம்" என்ற புதிய சேவை நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

கிராம மட்டங்களில் உள்ள பதியப்படாத பேருந்துகளை ஒன்றுதிரட்டி உரிய முறையில் பிரதேசசபை, கிராம அலுவலர், மாவட்ட அலுவலகத்தினர் ஆகியோரின் அனுமதியை பெற்று இந்தச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் தலைவராக அமுதலிங்கம் அன்பரசன், செயலாளராக பி.பரந்தாமன், பொருளாளராக டனுசன், 15 நிர்வாக உறுப்பினர்கள் உட்பட 45 பேருந்து உரிமையாளர்களின் ஒத்துழைப்புடனும் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் பாடசாலை சேவைகள், திருமண விழாக்கள், ஏனைய நிகழ்வுகளுக்கு தேவையான வாகன சேவைகளை வழங்கவுள்ளனர்.



நிகழ்வில் வவுனியா தெற்கு பிரதேசசபைத் தவிசாளர் த.யோகராசா, நெளுக்குளம் கிராம அலுவலர் எஸ். சாந்தரூபன் , தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் இ.ராஜேஸ்வரன், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தலைவர் ரவீந்திரன், பார ஊர்திகள் சங்கத் தலைவர், பிரதேசசபை உறுப்பினர் சங்க உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (ஒ-ரி1-110)

## கிராமந்தோறும் கடைத்தொகுதி

கொழும்பு, பெப். 18

நாட்டின் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் கடைத்தொகுதியொன்றை நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் ஒரு பெண் தெரிவுசெய்யப்பட்டு அவரது வீட்டின் ஒருபகுதியே கடைத்தொகுதியாக மாற்றப்படவுள்ளது.

அதற்கமைய தெரிவுசெய்யப்படும் வீட்டை புதுப்பிப்பதற்கு அல்லது புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

இதற்காக 15 ஆயிரம் மில்லியன் ரூபா வரவு -செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் 14 ஆயிரம் பெண் தொழிலாளர்களை உருவாக்க நுகர்வோர் விவகாரங்கள் மற்றும் கூட்டுறவு அமைச்சு முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால்மாவுக்குப் பதிலாக திரவப்பால்; உற்பத்தியாளர்களுடன் கலந்தாய்வு

வவுனியா,பெப்.18

**பால்மாவுக்குப் பதிலாக திரவப்பால் உற்பத்தியை ஊக்குவித்தல் தொடர்பில், வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட கால்நடை வளர்ப்பாளர்களுடன் கலந்துரையாடப்பட்டது.**

இராஜாங்க அமைச்சர் டி.பி. ஹேரத்துடனான சந்திப்பு, வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன் போது குறித்த மாவட்டங்களில் கால்நடை வளர்ப்பாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் விரிவாக ஆராயப்பட்டன.

குறிப்பாக வனவளத் திணைக்களங்களின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகளை விடுவித்து, மேய்ச்சல் தரைகளாகப் பயன்படுத்துவது தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. கால்நடை வளர்ப்பில் ஈடுபடுபவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்குவதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டன.

கலந்துரையாடலில் மாவட்டச் செயலர்களான ஸ்ரான்லி டிமெல், பி.ஏ.சரத்சந்திர, வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களங்களின் பணிப்பாளர்கள், கால்நடை மருத்துவர்கள், கால்நடை வளர்ப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ஒ-4-110)

## இலங்கைக்கு மாதாந்தம் 2 லட்சம் சுற்றுலாவிகள்

கொழும்பு,பெப்.18

இலங்கைக்கு மாதாந்தம் 2 லட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தருவர் என்று சுற்றுலாத்துறை அமைச்சு எதிர்பார்த்துள்ளது.

இந்த மாதத்தின் முதல் 15 நாள்களில் மாத்திரம் 50 ஆயிரத்து 326பேர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

அதற்கமைவாக இந்த ஆண்டு ஒரு லட்சத்து 32ஆயிரத்து 653 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

கடந்த காலங்களில் தனிநபர் அல்லது குடும்பமாக இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்தனர். எனினும் தற்போது சுற்றுலாக் குழுவாக வருகை தருகின்றனர் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. (ஒ-4-இ)



## சிவநாயகத்தின் நினைவு முத்திரை வெளியீடு

யாழ்ப்பாணம், பெப்.18

மூத்த பத்திரிகையாளர் ஜாம்பவான் எஸ். டி.சிவநாயகத்தின் நினைவாக ஞாபகார்த்த முத்திரை வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வுடன் எஸ். டி.சிவநாயகத்தின் 100ஆவது ஜனன தின நிகழ்வும் கொழும்பில் அமைந்துள்ள சாயி நிலையத்தில் அதன் தலைவர் எஸ். என். உதயநாயகம் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது, நிகழ்வில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான வே. இராதாகிருஷ்ணன், மனோ கணேசன் ஆகியோருக்கு ஞாபகார்த்த முத்திரை உறையை பிரதி தபால் மா அதிபர் திஸரகுமார வழங்கினார். ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெருமவின் பணிப்புரையில் இலங்கை முத்திரைப் பணியகம் இந்த முத்திரையை வெளியிட்டது. (வ-இ)

## டெங்குத் தொற்றுத் தீவிரம் 60 பிரிவுகளுக்கு எச்சரிக்கை

நாட்டில் டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை தீவிரமாக அதிகரித்து வருவதால், 60 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் அதிகூடிய எச்சரிக்கை வலயங்களாக, தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த முதலாம் திகதியிலிருந்து 6 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 925 டெங்குத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். தொடர்ந்து 7 ஆம் திகதியிலிருந்து 13ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 634 பேர் அடையாளம் காணப்பட்டனர். இவர்களில் 51 வீதமானோர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஒ-4-இ)

# பெண் ஊடகரை விடுவிக்குமாறு பொதுமக்களால் கவனவீர்ப்பு

கிளிநொச்சி, பெப். 18



ஊடகவியலாளரும் கவிஞரும், விளையாட்டு வீராங்கனையுமான டிவனியாவை விடுதலை செய்யுமாறு தெரிவித்து, பொதுமக்கள் நேற்றுக் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் ஸ்ரீமோகனிடம் இது தொடர்பில் மனுவொன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மார்ச் மாதம் 29 ஆம் திகதி டிவனியா மற்றும் அவரது அலுவலகத்தில் பணியாற்றிய மற்றுமொரு சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். விடுதலைப்புலிகள் அமைப்பின் கொள்கைகளை பரப்பும் வகையில் அவர்கள் செயற்பட்டனர் என்ற குற்றச்சாட்டு சந்தேகநபர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் டிவனியாவை விடுதலை செய்யக்கோரி நேற்று முன்தினம் போராட்டம் நடத்தப்பட்டு, பின்னர் அது தொடர்பான மனுவொன்று கையளிக்கப்பட்டுள்ளது. டிவனியாவின் விடுதலையை வலியுறுத்தி ஆயிரத்து 500 பேரின் கையொப்பங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (ம)




அச்சுவேலி சித்த மருந்து உற்பத்தி செய்யிற இடத்தில வேலை செய்யிறவரைப் பற்றி பட்சி சில தகவல்களைச் சொல்லி, அதுக்கு ஆணையாளரின்ர விளக்கம், வாசகர்களின் கடிதம் எல்லாம் வந்ததைப் பார்த்திருப்பியள். அதோட அந்த விசயத்தோட தொடர்புபட்ட பணியாளர் உதயனுக்கே நேரவந்து தன்ர பக்க நியாயத்தைச் சொன்னார். அதில ஒண்டு, அவருக்கு வந்திருக்கிறது தொற்றாத ஒரு நோய். பட்சி அதை, தொற்றுற வருத்தம் எண்டு பிழையாச் சொல்லிப்போட்டுது. அதுக்கு வாசகர்கள் மன்னிக்கவேணும்.

அதைவிட தனிப்பட்ட ரீதியில தன்னை மனசளவில 'புதினம் தெரியுமோ?' வில வந்த விசயம் தாக்கிட்டு எண்டும் அவர் சொன்னார். ஆனால் உண்மையில அண்டைக்கு பட்சி சொன்னதில அவருக்கு எதிரா ஒண்டுமில்லை எண்டதை வாசிச்சவை விளங்கியிருப்பியள். அவரில எந்தப் பிழையுமில்லை, அவருக்குப் பொருத்தமான இடத்தில, பொருத்தமான வேலையைக் குடுக்காதவையிலதான் பிழை எண்டதுதான் பட்சியின்ர நிலைப்பாடு. இன்னும் சொல்லப்போனால், அந்தப் பணியாளருக்கு ஆதரவாத்தான் எப்பவும் பட்சி நிக்கும்.

சரி, இந்த விசயம் சுகாதாரத் திணைக்கள மேல்மட்டத்தில பெரிய சலசலப்பை கொண்டந்திட்டு. அதால நேற்று மத்தியானம் போல திடீரெண்டு அச்சுவேலி சித்த மருந்து செய்யிற இடத்துக்கு ஒரு அதிகாரியள் குழு போயிருக்கு. அங்கபோய் எல்லாரையும் வடிவா விசாரிச்சு, பட்சி சொன்னது உண்மையா? இல்லையா? எண்டு அறிஞ்சிருக்கினம். கடைசியில, அந்தப் பணியாளருக்கு தற்காலிக இடமாற்றம் குடுபட்டிருக்கு. உடனடியா நடவடிக்கை எடுத்தம் திணைக்களத்துக்கு பட்சியின்ர பாராட்டு. அதேசமயம், அந்தப் பணியாளருக்கு இனியாவது சிக்கல் இல்லாத, பொருத்தமான வேலையை பொருத்தமான இடத்தில குடுத்து அவருக்கு மனவுளைச்சல் வராமல் பாக்க வேண்டியதும் திணைக்களத்தின்ர கடமை. அதையும் அவை கவனத்தில எடுக்க வேணும்.

✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦

நேற்று மயிலிட்டித் துறைமுகத்தில ரண்டாம் கட்ட அபிவிருத்திக்கெண்டு அடிக்கல் நட்டவை. இந்த நிகழ்வுக்கு கனவு பாழான எம்.பிக்கு அழைப்பில்லை, அழைப்பிதழில பேருமில்லை. ஆனால் இப்பிடி அழைப்பிதழில பேர் போடாட்டியும் வெக்க துக்கம் இல்லாமல் எல்லாத்துக்கும் போற ஆள்தானே அவர். அதால இதுக்கும் போனவர். அவரைக் கண்டவுடன கடற்றொழில் அமைச்சர் கூப்பிட்டு மரியாதை செய்து, பேசுறதுக்கும் சான்ஸ் குடுத்திருக்கிறார். அதால கனவு பாழான எம்.பிக்கு கடும் சந்தோசம். மைக்கை வாங்கினவர், அமைச்சரை கண்டபடி புளுகத் தொடங்கிட்டார். இவ்வளவு நாளும் எந்த அமைச்சரை ஓரம் கட்டினாரோ அவரையே இப்பிடி பப்ளிக்கா புகழ்ந்து ஐஸ் வைக்க, சுத்தி நிண்டவைக்கு இது கனவா, நனவா எண்டு சந்தேகம் வந்திட்டு. அமைச்சரோட மல்லுக்கு நிக்காமல் சேர்ந்து ஓடச் சொல்லி , கனவுக்காரருக்கு மேலிடத்து ஓர்டராம். அதாலதான் இப்பிடியொரு மாற்றம்.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சம்பள உயர்வு கோரி

# முன்பள்ளி ஆசிரியர்கள் முல்லையில் கவனவீர்ப்பு

முல்லைத்தீவு, பெப்.18

**சம்பள உயர்வுகோரி, முல்லைத்தீவு மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் நேற்றுக் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்னால் ஒன்று கூடிய முன்பள்ளி ஆசிரியர்கள், போராட்டத்தின் பின்னர், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலர் க.கனகேஸ்வரனிடம் மனுக் கையளித்தனர்.**



"கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலான காலம் சேவை நோக்கில் கற்பித்தல் பணிகளை முன்னெடுத்து வரும் எமக்கு, தற்போது ஆறாயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. இந்தக் கொடுப்பனவு எமது வாழ்க்கைக்குப் போதுமானதாக இல்லை. எனவே சம்பள உயர்வை வழங்கி, நிரந்தர நியமனத்தை வழங்க வேண்டும்" -என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ஒ-4-19)

## தமிழ் இளைஞனை நாடுகடத்திய சுவிஸ்

கொழும்பு, பெப். 18

சுவிற்ஸர்லாந்தில் இருந்து தமிழ் இளைஞரொருவர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுவிற்ஸர்லாந்தின் நிட்வால்டன் மாநிலத்தில் அகதி தஞ்சம்கோரி வசித்து வந்தவரே இரகசியமான முறையில் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார். அத்துடன் அகதி அந்தஸ்து பெற அதிகாரிகளைச் சந்திக்கச் சென்றபோதே அவர் கைது செய்யப்பட்டதுடன், இரகசியமாக இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டார் என்று அவரின் உறவினர்கள் தெரிவித்தனர். (ம)

## தமிழ் மக்களுக்கு நீதிகோரி லண்டனில் ஈருருளிப் பேரணி

கொழும்பு, பெப். 18

ஜெனிவா அமர்வை முன்னிட்டு தமிழ் மக்களுக்கு நீதிகோரி, ஈருருளிப் பேரணி பிரிட்டன் தலைநகர் லண்டனில் இடம்பெற்று வருகின்றது.

பிரித்தானியப் பிரதமர் இல்லத்தின் முன்னால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டத்துடன் இந்தப் பேரணி ஆரம்பித்துள்ளது.

ஐரோப்பிய ஆறு நாடுகளூடாக பயணத்தை மேற்கொள்ளவுள்ள செயற்பாட்டாளர்கள் மார்ச் 7ஆம் திகதியன்று ஜெனிவாவை சென்றடைய திட்டமிட்டுள்ளனர். (ம)

## சமுதித்த வீட்டின் மீது தாக்குதல் 26 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவு

யாழ்ப்பாணம், பெப்.18

ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் வீடு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் 26 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல்தாரிகள் வந்த வாகனங்களை அடையாளம் காண்பதற்கு 80 க்கும் மேற்பட்ட கண்காணிப்புக் கமராக்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன எனவும் சில காட்சிகள் மொரட்டுவ பல்கலைக்கழகத்துக்கு மேலதிக ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தொலைத்தொடர்பு கோபுரங்களிலிருந்து சமிக்ஞைகளை கண்காணிப்பதற்கான உத்தரவையும் பொலிஸார் பெற்றுள்ளனர். (வ-இ)

## மாணவர் பற்றாக்குறை பாடசாலைக்குப் பூட்டு

சாவகச்சேரி,பெப்.18

மாணவர்கள் இன்மையால், தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த மேலும் ஒரு பாடசாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.


நுணாவில்மேற்கில் உள்ள நூற்றாண்டு பழைமை வாய்ந்த இந்தப் பாடசாலையில் கடந்த வருடங்களில் மாணவர் இணைவது மிகக் குறைவாகக் காணப்பட்டது.

பாடசாலையை அண்மித்த பகுதியில் வசிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்ததால், அயலில் உள்ள இரு பாடசாலைகளுக்கு இங்குள்ள மாணவர்கள் மாற்றப்பட்டு, பாடசாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

மாணவர்களின் எண்ணிக்கை குறைவால் வலயத்தில் ஏற்கனவே எட்டுப் பாடசாலைகள் மூடப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4-9)

## உள்நாட்டு அரிசியின் விற்பனை வீழ்ச்சி

கொழும்பு, பெப்.18



வெளிநாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்யப்படுவதால் உள்நாட்டு அரிசியின் விற்பனை மற்றும் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என தேசிய அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தால் அரிசி இறக்குமதி செய்யப்படுவதால், இறக்குமதி அரிசியையே நுகர்வோர் அதிகளவில் கொள்வனவு செய்கின்றனர்.

இதனால் உள்நாட்டு அரிசியின் விற்பனை 60 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது என அந்தச் சங்கத்தின் தலைவர் பீ.கே ரஞ்சித் தெரிவித்தார். (வ-இ)

## கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், பெப். 18

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி தலைமை காரியாலய கட்டடத் திறப்பு விழா, நாளை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. கொத்தணித் தலைவர் செல்வராஜ் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார். (ஒ-ரி1-63)

## உயிராபத்தை ஏற்படுத்தும் போதைப்பொருள் கடத்தல்

### யாழில் மாட்டிய பெண்

யாழ்ப்பாணம், பெப்.18

உயிர் ஆபத்தை ஏற்படுத்தும் ஹெரோய்ன் போதைப்பொருளை, கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு சூட்சுமமான முறையில் கடத்தி, விற்பனையில் ஈடுபட்டு வந்த பெண்ணொருவர், பெருமளவு போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் பேருந்துமூலம் போதைப்பொருளைக் கடத்தி, யாழ்ப்பாணத்தில் தரகர்கள்மூலம் விற்பனை செய்வதில் பல நாள்களாக ஈடுபட்டிருந்தார். யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லியனகேவுக்குக் கிடைக்கப்பெற்ற தகவல் மற்றும் வழிகாட்டலின் அடிப்படையில், யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப்பிரிவின் பொறுப்பதிகாரி நிகால் பிரான்சிஸ் தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் ராஜரட்ணம் மற்றும் புவீ, சுயந்தன், பிரவீன், சுரேஸ், சந்திரரட்ண, பெண் பொலிஸ் கொன்ஸ்டபில் வர்ணகுணசூரிய ஆகிய உத்தியோகத்தர்கள் அரியாலையில் நேற்று முன்தினம் சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர், அதன்போது குறித்த பெண்ணைக் கைது செய்தனர். அவர் விற்பனைக்காக வைத்திருந்த 10 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளும் மீட்கப்பட்டது. இதன் பெறுமதி 5 தொடக்கம் 6 லட்சம் என்று பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-4-இ)

## வடக்கு மக்களின் பிரச்சினைகள் வெளிப்படையாக ஆராயப்படும்

### ஆளுநர் தெரிவிப்பு



வடக்கு மாகாணத்தில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில், துறைசார்ந்த அதிகாரிகள் மற்றும் சமூக அமைப்புக்களுடன் வெளிப்படைத்தன்மையுடன் ஆராயப்படும் என்று வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஆளுநர் செயலகத்துக்கு வழங்கிய முறைப்பாடுகள் தொடர்பில் வெளிப்படைத் தன்மையுடன் விவாதிக்கப்படும். இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சிவில், துறைசார் குழுக்கள் அழைக்கப்படுவர். சமைத்த உணவின் விலை, தொழில்முனைவோர், கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவித்தல், காய்கறிகளின் சில்லறை விலை, விவசாயிகளுக்கான செலவுகள், விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள், அத்தியாவசிய உள்ளீடுகளின் செலவுகள் உள்ளிட்டவை வெளிப்படையாக விவாதிக்கப்படும் -என்றார். (ஒ-4-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், பெப். 18

இலங்கை மின்சார சபை ஓய்வூதியர் நலன்புரி சங்க பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும் அண்மையில் சுன்னாகம் இ.மி.ச. மின் பாவனையாளர் சேவை நிலையத்தில் நடைபெற்றது.

இதன்போது தலைவராக எஸ். ஞானகணேசன், உபதலைவராக அ. நாகராஜா, செயலாளராக அன்ரன் ஞானப்பிரகாசம், உபசெயலாளராக எஸ்.நடராஜா, பொருளாளராக எஸ்.தவராஜா, நிர்வாக உறுப்பினர்களாக ம.விஜயசிறி, ப. ஜீவரட்ணம், ம. அனந்தராசன், ஆர். தர்மகோகிலன், ம. தங்கராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-ரி1)

# வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு கட்டுப்பாட்டு விலையில் சிமெந்து

சாவகச்சேரி,பெப்.18

**வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு சிமெந்து மற்றும் மணல் போன்றவற்றை, தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினர் கட்டுப்பாட்டு விலையில் வழங்கி வருகின்றனர்.**

10 லட்சம் ரூபா வீட்டுத்திட்டத்தில் 181 பயனாளிகளும், 6 லட்சம் ரூபா வீட்டுத் திட் டத்தில் 96 பயனாளிகளும் தெரிவுசெய்யப்பட்டு ஆரம்ப கட்டப் பணிகளுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. எனினும் சிமெந்து மற்றும் மணல் தட்டுப்பாடு காரணமாக, பலரது வீடமைக்கும் பணிகள் தாமதமடைந்துள்ளன. மாவட்டச் செயலகத்தினர் மற்றும் கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் ஊடாக சிமெந்து விநியோகிக்கப்பட்டு வருகின்றது. அதேவேளை, மணல் தட்டுப்பாடு காரணமாக, வேலைகள் இடைநிறுத்தப்பட்ட பயனாளர்களுக்கு, மாதாந்தம் இரண்டு உழவு இயந்திரத்தில் மணல் பெறுவதற்கான அனுமதிப்பத்திரம் பிரதேச செயலகத்தால் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. (ஒ-4,9)

## நிர்வாக சபைத்தெரிவு

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ். மாவட்ட சாரணர் சங்கத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு கடந்த 7 ஆம் திகதி மாவட்டச் செயலக அலுவலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்டச் செயலர் க.மகேசன் தலைமையில் இடம்பெற்றது.

நிர்வாகத்தெரிவில், தலைவராக யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன், உபதலைவர்களாக உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், மாகாணக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.இராஜசீலன், கலாநிதி பி.நாகரட்ணம், நிர்வாகக் குழுத் தலைவராக உதவிக் கல்விப் பணிப்பாளர் பி.என். சுதர்சன், செயலாளராக சாரணிய மாவட்ட ஆணையாளர் செ. தேவரஞ்சன், பொருளாளராக ஓய்வுநிலை உதவிக் கல்வி பணிப்பாளர் சண்.தயாளன், அங்கத்தவர்களாக யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் பி.தனபாலசிங்கம், வைத்தீஸ்வரா கல்லூரி அதிபர் வாசுகி தவபாலன், ஆசிரியர் எஸ்.கே.கிருபாகரன், மலாயன்கபே முகாமையாளர் "லயன்" என்.சதீஷ்குமார், பி.சி பார்க் இயக்குநர் க. சசிந்திரன், சாரணிய உதவி மாவட்ட ஆணையாளர்களான இ. தில்லைவாசன், கே. துற்ஜெயந்தன், ஏ.றஜீவன், திருமதி. ஈ.ஐ.தேவமித்திரன், எஸ். தவநேசன், கோ. சத்தியன், யாழ். மாவட்டச் செயலக உத்தியோகத்தர் பி.கஸ்ரோ ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ஒ-ரி1)

## குருந்தகம் பிரிவு மீள வழமைக்கு

சாவகச்சேரி,பெப்.18

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் மது பாவனையால் பாதிக்கப்படுவோருக்கு சிகிச்சை வழங்கும் குருந்தகம் சிகிச்சைப் பிரிவு மீளச் செயற்பட ஆரம்பித்துள்ளது.

இந்தச் சிகிச்சைப் பிரிவு கொரோனா காலம் தொடக்கம் மூடப்பட்டுள்ளதால், சிகிச்சை பெறமுடியவில்லை என்று பொதுமக்கள் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பாக மருத்துவமனைப் பொறுப்பதிகாரியுடன் தொடர்புகொண்டபோது, கொரோனாக் காலத்தில் விடுதி மூடவேண்டிய கட்டாய நிலை காணப்பட்டதால் தற்காலிகமாக மூடப்பட்டது. தற்போது கொரோனாவின் தாக்கம் குறைவடைந்து வருவதால், விடுதி இயங்கி வருகின்றது. இங்கு மதுசார பாவனையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை வழங்கப்படுகின்றது.

போதைப் பொருள்கள் பாவனையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை வழங்கப்படுவதுடன், இவர்களுக்குத் தேவையான உளநல சிகிச்சை மற்றும் ஆலோசனைகள் உரிய அதிகாரிகளால் வழங்கப்பட்டு வருகின்றன-என்றார். (ஒ-4 ,9)

## டெங்கு நோயாளர்கள் தென்மராட்சியில் அதிகரிப்பு

சாவகச்சேரி, பெப்.18

தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வெளிநோயாளர் சிகிச்சைக் பிரிவில் காய்ச்சல் காரணமாக சிகிச்சை பெற வருபவர்களுக்கு மேற்கொண்ட பரிசோதனையில் அவர்களில் பலர் டெங்குத் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.

15ஆம் திகதி வரை 12 பேருக்கு டெங்கு நோய்த் தாக்கம் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனால் பொதுமக்கள் தமது சுற்றுச் சூழலைத் துப்பரவாக வைத்திருக்க வேண்டும் என சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (வ-9)




## வாகன விபத்தில் ஒருவர் படுகாயம்

சாவகச்சேரி, பெப்.18

ஹைஏஸ் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் கால் முறிந்த நிலையில் ஒருவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

எழுதுமட்டுவாழ், ஆசைப்பிள்ளை ஏற்றத்தடியில் நேற்று இந்த விபத்து இடம்பெற்றது.

கொக்காவில் இந்துக் கல்லூரியின் அதிபரும் நல்லூர் கோட்டக் கல்வி அலுவலராகவும் பணியாற்றி ஓய்வு பெற்ற அருணாசலம் அகிலதாஸ் (வயது- 65) என்பவரே காயமடைந்தவராவார். (வ-9)

## இந்திய உதவியை எதிர்பார்க்கின்றோம்

*சம்பிக்க ரணவக்க எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு, பெப். 18

நெருக்கடி நிலைமையில் இந்தியா, இலங்கைக்கு வழங்கும் ஒத்துழைப்புக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க, இந்தியாவின் உதவிகள் இலங்கைக்குத் தேவைப்படுகின்றன என்றும் கோரிக்கை விடுத்தார்.

இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, சம்பிக்க ரணவக்க இடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போதே சம்பிக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள், இந்தியாவுடன் இணைந்து செயற்படவேண்டிய தேவைப்பாடுகள் மற்றும் இந்தியா தற்போது இலங்கைக்கு வழங்கிவரும் ஒத்துழைப்புகள் குறித்தும் இரண்டு தரப்பினரும் கலந்துரையாடியுள்ளனர்.

குறிப்பாக நாட்டின் தற்போதைய நிதி நெருக்கடி நிலைமைகளை கையாள்வதில் அரசாங்கம் முறையான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கத் தவறுகின்றது, அத்துடன் சகலரும் முகங்கொடுத்துவரும் கொரோனா நெருக்கடியும் இலங்கையை அதிகளவில் தாக்கியுள்ள காரணத்தால் ஒட்டுமொத்தமான நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இதிலிருந்து மீண்டு வருவதற்கு இந்தியா நட்புறவான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்றும் சம்பிக்க மேலும் தெரிவித்தார். (ம)

## திருவள்ளுவர் விழா

யாழ்ப்பாணம், பெப். 18

உரும்பிராய் கற்பக விநாயகர் கலாசார மண்டபத்தினரின் ஏற்பாட்டில், திருவள்ளுவர் விழா நாளை மறுதினம் பிற்பகல் 3 மணிக்கு உரும்பிராய் கற்பக விநாயகர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது திருக்குறள் மனனப்போட்டிகளில்வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கலும் இடம்பெறவுள்ளது.

முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில், பிரதம விருந்தினராக அகில இலங்கை கம்பன்கழக அமைப்பாளர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் . சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ப.கணேசன் ஆகியோர் கலந்துகொள்வர். (ஒ-ரி1,9)

## கட்சிச் சின்னங்கள் இரண்டு நீக்கம்

கொழும்பு, பெப்.18

நாட்டின் தேசிய சின்னங்களை ஒத்ததாக இருந்தமையால் அரசியல் கட்சிகளுக்கு ஒதுக்கப்படாமலுள்ள கட்சிச் சின்னங்களின் பட்டியலில் இருந்து இரண்டு சின்னங்கள் நீக்கப்பட்டன.

தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அதிவிசேட வர்த்தமானியில் இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, கிரீடம் மற்றும் விவசாயி ஆகிய சின்னங்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. (வ-இ)

# ஜனாதிபதி ஆணைக்குழு ரஞ்சனிடம் விசாரணை

கொழும்பு,பெப்.18

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு நேற்று அழைக்கப்பட்டார்.

சிறைச்சாலை அதிகாரிகள் ரஞ்சன் ராமநாயக்கவை, விசாரணைப் பிரிவுக்கு அழைத்து வந்தனர்.


நல்லாட்சி அரசின் காலத்தில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில், ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

அந்தக் காலத்தில் ரஞ்சன் ராமநாயக்க இராஜாங்க அமைச்சராக இருந்தமையால் அவர் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தார். (ஒ-4,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுத்தங்களுக்கு அடிபணியும் யாழ்ப்பாண மாவட்டச் செயலர்

## சபையில் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், பெப். 18

**அரசியல்வாதிகளின் அழுத்தங்களுக்கு அடிபணியும் யாழ்.மாவட்டச் செயலர் க.மகேசன் பதவியில் இருக்கும்வரை, இந்த மாவட்ட மக்களுக்கு அவிருத்திகளோ, தீர்வுகளோ கிட்டாது என்று வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் தவிசாளர் த. நடனேந்திரன் தெரிவித்தார்.**

வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போது சபையின் உறுப்பினர் ஜெயந்தன், தற்போது ஜனாதிபதி மக்களின் நலன்களை முன்னிறுத்தி, கிராம அலுவலர் பிரிவுகளுக்கு தலா 3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு மற்றும் வட்டாரங்களுக்கு தலா 4 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்து நடைமுறைப்படுத்தியுள்ளார். குறித்த திட்டத்தை பாரபட்சமின்றி முன்னெடுக்கவேண்டும். ஆனால், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு ஊடாக ஒரு பட்டியல் அனுப்பப்பட்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் அனைத்துக் கட்சியின் பிரதிநிதிகளுக்கும் கௌரவம் கொடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள் ஓரங்கட்டப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த தவிசாளர், நாட்டில் உண்மையான நல்லிணக்கத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஆனால், யாழ். மாவட்டத்தில் மட்டும் இவ்வாறான புறக்கணிப்புகள் நடைபெற்றுள்ளன. இதற்கு மாவட்டச் செயலரே பொறுப்புக்கூறவேண்டும். ஆனால், அவர் ஓர் அரசியல் தரப்பின் பின்னணியில் இருந்து செயற்படுவதால், அந்த அரசியல் தரப்பினரது முடிவுகளையே அதிகாரிகளூடாக மக்களிடம் திணிக்கின்றார். இதுதொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை எழுதி, அதற்கான தீர்வைக் கோர நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். இதற்கு அனைத்து உறுப்பினர்களின் முழுமையான ஆதரவுடன் கண்டனம் நிறைவேற்றப்பட்டது. (ஒ-4-125)

## சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப்.18

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆண்டில் இளம் இந்துச் சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் வாராந்தச் சொற்பொழிவும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

சிவஸ்ரீ. பால. திருகுணானந்தக்குருக்களின் அனுசரணையில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஏழாவது தொடர் சொற்பொழிவு திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்க அறநெறிப் பாடசாலையில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப.3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதன்போது 'சைவ சமய மறுமலர்ச்சியின் தந்தை நாவலர்' எனும் தொனிப்பொருளில் சைவப்புலவர் செ.த.குமரன் சிறப்புச் சொற்பொழிவை ஆற்றவுள்ளார். (ச)



## பூநகரி நகர்ப்பகுதி தூய்மையாக்கல்

கிளிநொச்சி, பெப்.18

கிளிநொச்சி, பூநகரி நகர்ப் பகுதியில் தூய்மையாக்கும் செயற்றிட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்டது. பூநகரி பிரதேச சபை உபஅலுவலக பொறுப்பதிகாரி மற்றும் செயலரின் நெறிப்படுத்தலில் குறித்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதன்படி பூநகரி பேருந்து நிலையம் மற்றும் கடைத்தொகுதிகள் ஆகியவை தூய்மையாக்கப்பட்டன. இதில் பூநகரி பிரதேசசபையின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர். (ச-13)

## சபையின் உடைமையாக 440 பொது வீதிகள்

சாவகச்சேரி,பெப்.18

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 440 பொதுவீதிகள் மற்றும் ஒழுங்கைகள் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, சபையின் உடைமையாக்கப்படவுள்ளன.

சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் வீதி அபிவிருத்தித் திணைக்களம் போன்றவற்றின் வீதிகளுடன், சபையின் பராமரிப்பில் பல வீதிகள் காணப்பட்டன.

இந்த வீதிகளைப் புனரமைக்க வேண்டுமென சபையின் உறுப்பினர்களும், பொதுமக்களும் கோரி வருகின்றனர். எனினும் அவற்றைப் புனரமைப்ப தாயின், சபைக்கு உரித்தானதாக இருக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டது. அதனால் குறித்த வீதிகள் சபைக்கு உரித்தானவை என்று வர்த்தமானியில் பிரசுரிக்க மாகாண- உள்ளூராட்சி ஆணையாளர் மூலம் மாகாண ஆளுநருக்கு சபையின் தவிசாளரால் கோரப்பட்டது.

1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 356 பிரிவுக்கமைய, அவற்றை வர்த்தமானியில் பிரசுரிக்க மாகாண ஆளுநர் அனுமதி வழங்கியுள்ளார்.

இதனையடுத்து சபை எல்லைக்குட்பட்ட 440 பொது வீதிகள் மற்றும் ஒழுங்கைகள் வர்த்தமானியில் மூன்று மொழிகளிலும் பிரசுரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஒ-4-9)

## விண்ணப்பம் கோரல்

கொழும்பு, பெப். 18

களனிப் பல்கலைக்கழகத்தில் மனிதவள முகாமைத்துவ முதுமாணிப் பட்டத்துக்கான கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கற்கைநெறிக்கு மனிதவள முகாமைத்துவ பாடத்துடன் தொடர்புடைய இளமாணிப்பட்டம் பெற்றவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 18 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கவேண்டும்.

மேலதிக விவரங்களைப் பெற 0113059909 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும். (ஒ-ரி)

★ ★ ★

இலங்கை இரசாயனவியல் நிறுவனத்தால் ஆய்வுகூட தொழில்நுட்ப டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்கலாம். மேலதிக விவரங்களுக்கு 077700 4239 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (ஒ-ரி)

## தடுப்பூசி ஏற்றும் பணி இன்று சாவகச்சேரியில்

சாவகச்சேரி, பெப்.18

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் இன்றைய தினம் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் தடுப்பூசி ஏற்றுவதற்கு வந்திருந்த முதியவர்கள், வெளிநாடுகளுக்குச் செல்வோர் உட்படப் பலர் சுகாதார அலுவலர்களின் பணிப்புறக்கணிப்பால் ஏமாற்றத்துடன் திரும்பினர். இந்தநிலையில் இன்று கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்படும் என சுகாதாரப் பிரிவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)



மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் பணிமையின், புதிய உதவிப் பணிப்பாளராக ரி.பூலோகராஜா உத்தியோகபூர்வமாக கடமைகளைப் பொறுப்பேற்றார். 1998 ஆம்ஆண்டு தொடக்கம் மன்னார் இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் சேவை அதிகாரியாகவும், மாவட்ட இளைஞர் சேவை அதிகாரியாகவும் பணிபுரிந்த இவர், பதவி உயர்வு பெற்று உதவிப் பணிப்பாளராகப் பொறுப்பேற்றுள்ளார். (ஒ-4-56)




## முல்லைத்தீவு பொலிஸாருக்கு புதிய வாகனம் கையளிப்பு

முல்லைத்தீவு,பெப்.18

போதைப்பொருள் கடத்தல் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடிய வாகனமொன்று முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜப்பான் அரசு வாகனங்கள் மற்றும் சில உபகரணங்களை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியது. அதில் லாண்ட் க்ரூஸர் வாகனமொன்று முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. (ஒ-4-19)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பெருந்தொற்றில் கைவிடுதல்

"மருத்துவமனைகளிலும், மருத்துவமனைகளுக்கு வெளியிலும் உயிரிழப்புகள் ஏற்படும்போது உடற்கூற்றுப் பரிசோதனையின்போது பி.சி.ஆர். சோதனைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை" என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.சோழியன் குடுமி சும்மா ஆடாதுதானே. அப்படியானால் இந்த அறிவிப்பின் பின்னாலும் ஏதோவொரு காரணம் இருக்கத்தானே செய்யும் என்ற சந்தேகம் எழுவது தவிர்க்கமுடியாததே.

இவ்வளவு காலமும் இறந்த எல்லோருக்கும் கட்டாயம் பி.சி.ஆர் செய்ய வேண்டுமென ஒற்றைக்காலில் நின்றதும் இதே அரசாங்கம் தான். அதனால் கொரோனாவுக்கான அறிகுறிகளோடு சாவடைந்தவர்கள் மட்டுமல்லாது ஏனைய வகைகளில் உயிரிழந்தவர்களின் சடலங்களும் பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட்டே உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆனால், கொரோனாவுக்கான எந்த அறிகுறியும் இல்லாமலேயே, விபத்தில் இறந்தவர்கள், தற்கொலை செய்தவர்கள், கொலை செய்யப்பட்டவர்கள் என்போரில் அநேகருக்கும் உயிரிழப்பின் பின்னரான பி.சி.ஆர். பரிசோதனைகளில் அவர்களுக்கும் கொரோனாத் தொற்றிருந்தமை கண்டறியப்பட்டிருந்தது. அப்படி இறப்பின் பின்னர் கொரோனாவால் பீடிக்கப்பட்டிருந்தனரெனக் கண்டுபிடிக்கப்பட்டவர்களின் சடலங்களும், கொரோனா விதிமுறைகளுக்கமையவே , அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டன.

பி.சி.ஆர். பரிசோதனைகளின் எல்லையைச் சுருக்கும்- அதன் தேவையை மட்டுப்படுத்தும் -இந்த அறிவிப்புடன் நாம் சில விடயங்களைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். நாடளாவியரீதியில் பி.சி.ஆர். சோதனைகளுக்கு உரிய உபகரணத் தொகுதிகளுக்குப் பெருந்தட்டுப்பாடு அண்மைக்காலமாக நிலவுகின்றது. இந்த நிலையில் இனிமேல் மருத்துவமனைகளிலும், மருத்துவமனைகளுக்கு வெளியிலும் உயிரிழப்போருக்கு பி.சி.ஆர். சோதனைகள் தேவையற்றவையெனில், அதற்கான பி.சி.ஆர். உபகரணத் தொகுதியும் ,செலவும் அரசாங்கத்துக்கு மீதமாகும். அத்தோடு கொரோனாத் தொற்றால் ஏற்படும் இறப்புகளின் எண்ணிக்கையும் மறைக்கப்பட- இருட்டடிப்புச் செய்யப்பட-இந்த அறிவிப்பு அரசாங்கத்துக்கு ஏதுவாக அமையும். அப்படியெனில் இந்தநாட்டில் கொரோனாத் தொற்று எண்ணிக்கையும் அதன் தீவிரத் தன்மையையும் எந்த அளவீட்டை வைத்து சுகாதாரத்துறை மேற்கொள்ளப்போகின்றது? என்பதை துறைசார் அதிகாரிகள்தான் தெளிவுபடுத்த வேண்டும்.

கொரோனாப் பெருந்தொற்றென்பது இலங்கைக்கு மட்டுமேயான தனிப்பட்டதொரு பிரச்சினையல்ல. பெருந்தொற்றுடன் தொடர்புடைய புள்ளிவிவரங்கள் நான்கு பக்கமும் கடலால் இந்தத் தீவுடன் குறுகிப்போகப்போவதும்அல்ல. இது உலகளாவிய பிரச்சினை. இந்தப் புள்ளிவி வர மறைப்பு இருட்டடிப்பு - உலகளாவிய தரவுச் சேகரிப்புக்கும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த நிலையானது, இன்று கொரோனாப் பெருந்தொற்று விடயத்தில் வடகொரியாவுக்கு எவ்வாறு இருண்ட முகமொன்று சர்வதேச சமூகத்தால் ஏற்படுத்தப்பட்டதோ அவ்வாறு இலங்கைக்கும் ஏற்படுத்தப்படவும் வாய்ப்புக்கள் மிக அதிகம்.

பி.சி.ஆர். சோதனைகளுக்கு உரிய உபகரணத் தொகுதிகளுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டால்தான் இப்படி ஒரு முடிவை அரசாங்கம் எடுத்திருக்குமெனில், அதை நிவர்த்திசெய்வதற்கு ஏன் இன்னமும் வினைத்திறனான ஒரு நடவடிக்கையை அரசு மேற்கொள்ளவில்லை? என்ற கேள்வியும் இங்கே பூதாகரமாகி நிற்கின்றது. பெருந்தொற்றின் புள்ளிவிவரங்களில் வெளிப்படைத்தன்மையைப் பேணுவதற்கு இன்று ஏற்பட்டுள்ள இந்த பெருந்தடங்கல், இப்படி இறந்தோருக்கு கொரோனாப் பரிசோதனை செய்வதில்லை என்ற முடிவால், இன்னுமின்னும் தீவிரமாகத்தான் போகின்றது. இது அடுத்தகட்டத்துக்குச் சென்று வெள்ளம் தலையை மேவிப்பாய்வதற்கு முன்னர் போர்க்கால அடிப்படையில் சிக்கலை சீர்செய்வதற்கு அரசு முனையவேண்டும்.

இறப்பின் பின்னரான பி.சி.ஆர். சோதனைகள் தேவையில்லையென்றால், இனிமேல் அறிகுறிகள் எதுவுமில்லாமலேயே, விபத்து போன்ற இன்னோரன்ன சம்பவிப்புகளால் உயிரிழப்போருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்தால் அது கண்டுபிடிக்கப்படாமலேயே போய்விடுமா? அப்படி உயிரிழந்தவர் கொரோனாத் தொற்றுக்குள்ளான விடயம் தெரியாமல், அவரின் இறுதிச் சடங்குகளில் பங்கேற்போரின் கதி என்ன? புதிய கொரோனா துணைக் கொத்தணிகளை உருவாக்கும் களங்களாக சாவு வீடுகள் அமையப்போகின்றனவா? இப்போது சடலங்களுக்கு கொரோனாப் பரிசோதனை செய்யத் தேவையில்லை என்று தளர்வுநிலையை அறிவிக்கும் அரசாங்கம், ஏன் இதுவரை காலமும் அதனைச் செய்யவேண்டுமெனக் கட்டாயப்படுத்தியது? இப்படி கேள்விகள் மட்டுமே எழுகின்றன. பதில் இந்த அரசாங்கத்துக்கு மட்டுமே தெரியும். ஆனாலும், இப்படி கொரோனா எதிர்ப்பு நடவடிக்கைகளை ஒவ்வொன்றாகக் கைவிடுதல் என்[illegible] கொரோனாப் பெருந்தொற்றின் நடுவே கைவிடுதலுக்[illegible]

நாளொரு நல்வார்த்தை

"ஊஞ்சல் ஆடுவதை போன்றது அல்ல வாழ்க்கை: புயலுக்கு நடுவே படகினை செலுத்துவது போன்றது".

- காண்டேகர்




# அன்று கறுப்புக்கொடி இன்று விருந்துபசாரம்

## அரசாங்கத்தை விளாசுகின்றார் சஜித்

**கொழும்பு, பெப். 18**

**நன்கொடையாக வழங்கிய வீடுகளை திறக்க மோடி வந்தபோது கறுப்புக்கொடி ஏந்தியவர்கள், இன்று கடனுக்குக் கிடைத்த எண்ணெய்க் கப்பலை வரவேற்க உற்சவம் நடத்துகின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடன் அடிப்படையில் கிடைத்த எரிபொருள் கப்பல் இலங்கைக்கு அண்மையில் வந்தபோது அமைச்சர்கள் சென்று கோலாகலமாக உற்சவம் நடத்தி வரவேற்றனர். என்னுடைய கோரிக்கையின் பிரகாரம் கடன் உதவியின் அடிப்படையில் கடந்த காலங்களில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை திறப்பதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வந்தபோது கறுப்புக் கொடி ஏந்தி எதிர்ப்பு வெளியிடுமாறு கோரிய அமைச்சர்கள் இன்று கடனுக்குக் கிடைத்த எரிபொருள் கப்பலை வரவேற்க செல்வது விதியின் விளையாட்டாகும்.



எரிபொருள் விலை இன்னும் சில நாள்களில் மீண்டும் அதிகரிக்கப்படுவது உறுதி. அது வரலாற்றில் மிகக்கூடிய எரிபொருள் விலை அதிகரிப்பாக அமையும் - என்றார். (ம)

# மன்னாரில் 16நாள்களில் 377 தொற்றாளர்கள்

மன்னார், பெப்.18

மன்னார் மாவட்டத்தில் கடந்த 16 நாள்களில் 377 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார். மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மன்னாரில் இந்தவருடம் மொத்தமாக 578 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். கொரோனாத் தொற்றால் பெப்ரவரி மாதம் 3 பேர் உயிரிழந்துள்ளனர். தற்போது வரை மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் 39 பேர் உயிரிழந்துள்ளனர். ஒவ்வொரு 120 நோயாளர்களுக்கும் ஒருவர் என்ற வகையில் இறப்பு பதிவாகியுள்ளது. 2ஆவது தடுப்பூசி பெற்று மூன்று மாதங்கள் நிறைவடைந்தவர்கள் கட்டாயமாக 3ஆவது தடுப்பூசியை பெற்றுக்கொள்ள வேண்டும். திருக்கேதீஸ்வர சிவராத்திரி நிகழ்வில் கலந்துகொள்ள எதிர்பார்த்துள்ள பக்தர்கள் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்று, 2 வாரங்கள் நிறைவடைந்துள்ளதை உறுதி செய்து கொள்ள வேண்டும் - என்றார். (வ-56)


நாளை 19.02.2022 சனிக்கிழமை மாசி 07
சுபநேரம் : 03.32 - 05.02
ராகுகாலம் : 09.32 - 11.02
திருவள்ளுவர் குருபூஜை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வல்லிபுர ஆழ்வார் வருடாந்த உற்சவத்தின், சமுத்திர தீர்த்தோற்சவம் நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணிக்கு கற்கோவளம் இந்து சமுத்திரத்தில் இடம் பெற்றது. (ஒ-ரி1-113)

### தனிநாட்டுக்காகப் போராட-
# கஜேந்திரகுமார் தயாரெனில் நானும் அதில் இணையத்தயார்!
### சிறீகாந்தா சவால்



**கொழும்பு, பெப். 18**

**தனிநாட்டுக்கு போராடுவதற்கு கஜேந்திரகுமார் பொன்னம் பலம் தயாரென்றால், நானும் தயாராக இருக்கிறேன். ஆனால் எமது மக்கள் தயாராக இருக்கிறார்களா என்ற கேள்வியுள்ளது. இப் போதைக்கு எது சாத்தியம் என்பதை புரிந்து தான், '13'ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தக் கோரியுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான என்.சிறீகாந்தா.**

யாழ்ப்பாணம் இளங்கலைஞர் மண்டபத்தில் 6 தமிழ்க் கட்சிகளின் ஏற்பாட்டில் நடந்த கருத்தரங்கில் நேற்றுமுன்தினம் கலந்து கொண்டு உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிங்களத் தலைவர்கள் தமிழர் களை ஏமாற்றியே வந்திருக்கிறார் கள். எமக்கு 13ஆவது திருத்தத்தை நாடுவதைத் தவிர இப்பொழுது வேறு தெரிவுகள் இல்லை. இன் னொரு தெரிவு உள்ளது. தனிநாட் டுக்கு போராடுவது. அதற்கு கஜேந் திரகுமார் பொன்னம்பலம் தயா ரென்றால், நானும் தயாராக இருக்கிறேன். ஆனால் எமது மக் கள் தயாராக இருக்கிறார்களா? என்ற கேள்வியுள்ளது. 30 வருட காலத்தைவிட நீண்ட போரின் விளைவுகளைச் சுமந்துகொண்டி ருக்கும் எமது மக்கள் இப்பொழுது தான் மெல்லமெல்ல எழுந்து கொண்டிருக்கிறார்கள். இப்போ தைக்கு எதுசாத்தியம் என்பதை புரிந்துதான், 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடை முறைப்படுத்தக் கோரியுள்ளோம். 13ஆவது திருத்தம் நடைமுறைப் படுத்தப்படுமா? இதற்கும் அதே கதிதானா என நீங்கள் கேட்கலாம். அது இந்தியாவின் பிரச்சினை. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டது தமிழர்கள் அல் லர். இந்தியாவும், இலங்கையுமே கையெழுத்திட்டன. இந்தியாவே அதைப்பார்த்துக்கொள்ளவேண்டும். ஆனால், இன்னொரு வாய்ப்பு உள்ளது. 1986ஆம் ஆண்டு வெளியான ரெலோவின் வெளியீ டான ரெலோ ரைம்ஸ் என்ற ஆங் கில இதழில், இந்தியாவின் பாது காப்பு நலன்களையும், அபிலாசை களையும் தொட்டு ஒரு கடிதத்தை எழுதியிருந்தேன். இந்தியாவின் பாதுகாப்பு நலன்களும், தமிழீழ மக்களின் தேசிய அபிலாஷைக ளும் பிரித்தெடுக்க முடியாதவை எனக் குறிப்பிட்டிருந்தேன். அந்த கூற்றுக்கு வலுச்சேர்க்கும் சூழலே சீனாவின் தயவில் ஏற்பட்டுள்ளது. சீனத்தூதர் இங்கு வந்து, இந்தியா எவ்வளவு தூரமெனக் கேட்டது, தூங்கும் புலியை தட்டியெழுப்பும் சம்பவம். இப்பொழுது, இந்தியா வின் பாதுகாப்பு நலன்களும், தமிழீழ மக்களின் தேசிய அபிலா ஷைகளும் முன்னெப்பொழுது மில்லாதளவில் நெருங்கி வந்துள் ளது. இந்தச் சந்தர்ப்பத்தை எப் படிப் பயன்படுத்தப் போகிறோம்? கஜேந்திரகுமார் சொல்வதைப் போல சமஷ்டியொன்றும் கிடைக் காது. நாங்களும்தான் சமஷ் டியைப் பற்றி பேசுகிறோம். சிங் களத் தலைவர்கள் ஒருபோதும் சமஷ்டிக்கு சம்மதிக்க மாட்டார்கள். அப்படியாயின் ஏன் சமஷ்டியைக் கோருகிறோம் என கேட்கலாம். இன்றைக்குள்ள அரசியல் சூழலில் படிப்படியாகத்தான் முன்னேறிச் செல்லலாம். 13ஆவது திருத்தம் ஓர் ஆரம்பப்புள்ளி. சமஷ்டியை நாம் விட்டு விடப்போவதில்லை - என்றார். (ம)

# தமிழர்களிடம் இருந்து முழுமையான அபகரிப்பு
### அரசாங்கம் மீது சுரேஷ் குற்றச்சாட்டு



**கொழும்பு, பெப். 18**

**எம்மிடம் இருக்கின்ற சில வற்றை நாம் பாதுகாக்க நினைக்கின்றோம். ஆனால் அரசாங்கமோ தமிழ் மக்களிடம் உள்ள எல்லாவற்றையும் பறிக்க முயற்சிசெய்து வருகிறது என ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச் சந்திரன்தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணம் இளம் கலைஞர் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற அனைத்து தமிழ் கட்சிகளின் கலந்துரை யாடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரி விக்கும்போதே அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்;

வடக்கு - கிழக்கில் சிங் கள குடியேற்றங்களை நிறுவி, எமது நிலத்தை இல்லாமற் செய்கிறது அரசு. இந்த நிலையில் புதிய அரசமைப்பை கொண்டு வருவதாக சொல்கின்றனர். இது வருமா? வராதா? என்று தெரியாது. ஆனால் அந்த புதிய சட்டவரை வில், இப்போது கொடுத் துள்ள சில அதிகாரங்கள் கூட எமக்குக் கிடைக்காது. அதிலும் மாகாண சபை அதிகார முறைமை இல் லாமற் போகலாம்.

இதனால்தான் 13ஆவது திருத்தம் வேண்டும் என இந்தியாவிடம் கேட்கின் றோம். அவர்கள்தான் ஒப்பந்த பங்குதாரர்கள். ஆகவேதான் அவர் களைக் கேட்கின்றோம். இன்றுவரை எமது தீர்வு தொடர்பில் நாம் இந்தியா வுடன் பேசவில்லை. ஆகவே, இருப்பைத் தக்க வைப்பதற்கு நாம் 13ஆவது திருத்தம் வேண்டும் என்கின் றோம். அது தீர்வில்லை - என்றார். (ம)

### அரசில் அங்கம் வகிக்கும்
# கூட்டணிக் கட்சிகள் அவசர சந்திப்பு!

**கொழும்பு, பெப். 18**

**அரசாங்கத்தின் அங்கம் வகிக்கும் கூட்டணிக் கட் சிகளின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அவ சர சந்திப்பொன்று அமைச்சர் விமல் வீர வன்ஸவின் இல்லத்தில் நேற்றுமுன்தினம் நடை பெற்றுள்ளது.**

இந்தச் சந்திப்பில் நாடு தற்போது எதிர்கொண் டுள்ள பாரதூரமான பிரச்சினைகளைத் தீர்ப் பது தொடர்பாக விரிவா கக் கலந்துரையாடப்பட் டுள்ளது. நெருக்கடி களைத் தீர்ப்பது தொடர் பில் இந்தக் கலந்துரை யாடலில் சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன என்று அவற்றை ஓர் அறிக்கையாக எதிர்வ ரும் 2ஆம் திகதி அர சாங்கத்திடம் கைய ளிக்க தீர்மானிக்கப்பட் டுள்ளது - என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது. (ம)



# யாழ்ப்பாண பல்கலையில் பௌதிக ஆய்வு மாநாடு

**யாழ்ப்பாணம், பெப்.18**

**யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் மாணவர்களின் பௌதிக மாணவர் ஆய்வு மாநாடு நேற்று வியா ழக்கிழமை இடம்பெற்றது.**

இதில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா சியர் சி.ஸ்ரீசற்குணராஜா முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

முன்னாள் தகுதிவாய்ந்த அதிகாரியும், வாழ்நாள் பேராசிரியருமான பேராசிரியர் க. கந்தசாமி சிறப்பு விருந்தினராகவும், விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பி. ரவிராஜன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர். இந்த ஆய்வு மாநாட்டில் 18 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. (ச)

# மருத்துவ முகாம்

**யாழ்ப்பாணம், பெப். 18**

**யாழ். மாவட்ட திரிசாரணர்களின் ஏற்பாட்டில், மருத் துவமுகாம் நேற்றுமுன்தினம் சன்மார்க்க மகாவித்தி யாலயத்தில் இடம்பெற்றது.**

முகாமில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், இலங்கை சாரணர் சங்க யாழ். மாவட்டக் கிளை உப தலைவர் இ.எஸ். பி.நாகரத்தினம், கிளிநொச்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் பி.என்.சுதர்சன், ஆணையாளர் செ.தேவரஞ்சன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொ.கஜேந்திரகுமார், எஸ்.கஜேந்திரன் மற்றும் யாழ். மாவட்ட ஆணையாளர் இ.தவகோபால் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ஒ-ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிணற்றில் தவறிவீழ்ந்து 13 பெண்கள் உயிரிழப்பு

## திருமண நிகழ்வில் சோகம்



**உத்தரப்பிரதேசம், பெப்.18**

**உத்தரப் பிரதேச மாநிலத்திலுள்ள திருமண வீடொன்றில் உள்ள கிணற்றில் தவறி வீழ்ந்து சிறுமிகள் உட்பட 13 பெண்கள் பரிதாப மாக உயிரிழந்த சம்பவம் அங்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

குஷிநகர் மாவட்டம், நெபுவா நவு ராங்கியா பகுதியில் நேற்றுமுன் தினம் புதன்கிழமை இரவு திருமண நிகழ்வு ஒன்று நடைபெற்றது. இதில் பங்கேற்ற சில பெண்கள் அங்குள்ள கிணற்றின்மீது போடப்பட்டிருந்த மூடியின்மீது அமர்ந்திருந்தனர். அதிகளவிலான பாரம் தாங்காமல் கிணற்றின் இரும்பு மூடி உடைந்து விழுந்ததில் நீரில் மூழ்கி 13 பெண் கள் பரிதாபமாக உயிரிழந்துள்ள னர். உயிரிழந்தவர்களின் உடல் கள் மீட்கப்பட்டு உடற்கூற்றுப் பரி சோதனைக்காக அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளன. மேலும் இருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில் விபத்தில் உயிரி ழந்தவர்களுக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். அத்துடன் விபத்தில் உயிரிழந்தவர் களின் குடும்பங்களுக்குப் பிரதமர் மோடி தலா 2 லட்சம் ரூபாவும் விபத்தில் காயமடைந்தவர்களுக்கு தலா ரூ. 50 ஆயிரமும் நிவாரண மாக அறிவித்துள்ளார். (ச-இ)

# புனிதத்தைக் காப்பதற்கு கல்வியைத் துறக்கத் தயார்

### முஸ்லிம் மாணவிகள் போர்க்கொடி


கர்நாடகா, பெப்.18

கர்நாடக முஸ்லிம் மாணவிகள் ஹிஜாப் அணிந்து வர தடைவிதிக்கப்பட்டதையடுத்து 'புனிதத்தை காக்க கல்வியைத் துறக்கத் தயார்' என மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கர்நாடகத்தில் 7 நாள்கள் விடுமுறைக்குப் பின் மீண்டும் கல்லூரிகள் நேற்றுமுன்தினம் திறக்கப் பட்டன. இதன்போது ஹிஜாப் அணிந்து வந்த முஸ்லிம் மாணவிகளுக்கு அனுமதி மறுக்கப்பட் டது. இதையடுத்து அவர்கள் போராட்டத்தில் ஈடு பட்டுள்ளனர். மேலும் 'புனிதத்தைக் காக்க கல் வியைத் துறக்கத் தயார்' எனக் கோஷமிட்டு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

"மழலையர் பள்ளியில் சேர்ந்து படித்தது முதல் ஹிஜாப் அணிந்து வருகிறோம். இதுவரை எந்தத் தடையும் இல்லை. கடந்த இரண்டு வாரமாக இந்தப் பிரச்சினை தலைதூக்கியுள்ளது. கல் விக்கு இணையாக ஹிஜாப்பை மதிக்கிறோம். தற்போது கல்வியா? ஹிஜாப்பா? என்றால், ஹிஜாப்தான் முக்கியம்". மேலும் ஹிஜாப் ஒரு புனித ஆடை. புனிதத்தைக் காக்க கல்வியைத் துறக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்று முழக்கங்கள் எழுப்பியுள்ளனர். இதையடுத்து கர்நாடக மாநிலத்திலுள்ள அனைத்துக் கல்லூரிகள் முன்பும் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள் ளது என தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# மலையாள நடிகர் பிரதீப் மாரடைப்பால் சாவு!



சென்னை, பெப்.18

மலையாள திரையுலகின் முன் னணி நடிகரான கோட்டயம் பிரதீப் மாரடைப்பால் நேற்றுக் காலமானார்.

அவருக்கு வயது 61. அவரது மறைவு கேரள திரையுலகத்தினர் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் அவரது மறைவுக்கு திரையுலகினர் இரங்கல் தெரிவித்து வருகின்ற னர்.

பல்வேறு திரைப்படங்களில் நகைச்சுவைக் கதா பாத்திரங்களை ஏற்று நடித்துள்ளார். இவர் தமிழில் 'விண்ணைத்தாண்டி வருவாயா' , 'ராஜா ராணி' உள்ளிட்ட படங்களில் நடித்திருந்தார். (ச-இ)



# பிரேஸிலில் கனமழை உயிரிழப்பு 78

பிரேஸில், பெப்.18

பிரேஸிலில் ஏற்பட்ட கனமழையால் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 78ஆக உயர்வடைந் துள்ளது. பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ மாகாணத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் இடை விடாது கனமழை கொட்டித்தீர்த்தது. 30 நாள்கள் பெய்யவேண்டிய மழை வெறும் 3 மணிநேரத்தில் பெய்துள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர் கனமழையால் அங்குள்ள பல் வேறு நகரங்களில் வெள்ளம் கரை புரண்டோடுகிறது. இதில் ஆயிரக்க ணக்கான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின. சாலைகளில் வெள்ளம் ஆறாக பெருக்கெடுத்து ஓடுவதால் போக்குவரத்து முற்றிலுமாக முடங்கி யுள்ளது. இந்த நிலையில் இதுவரை யில், வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 78 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் தொடர்ந்து வருகின்றன என வும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# மூதாட்டி மீது வன்புணர்வு

புதுடில்லி, பெப்.18

இந்தியாவில் 87 வயதான வயோதிபப் பெண் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத் துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

டில்லியில் திலக் நகரில் 87 வயது வயோதிபப் பெண் தனது மகளுடன் வசித்து வந்துள்ளார். இந்த நிலை யில் மகள் வெளியே சென்ற நிலையில் வீட்டினுள் புகுந்த ஒருவர் குறித்த வயோதிபப் பெண்ணை வன்புணர்வுக் குட்படுத்தியதுடன் வீட்டிலி ருந்த பொருள்களையும் திருடிச் சென்றுள்ளார் என பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலி ஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ச)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** அதிர்ஷ்டம் வரும்போது அதைப் புரிந்துகொண்டு வரவேற் பீர்கள். தடைகளாய் இருந்த விஷ யங்கள் இனி படிகளாக மாறும்.சலிப் பான தருணங்களை எளிதாகக் கடந்து செல்வீர்கள்.

**இடபம்:** முடிவடையாமல் இருந்த விஷயம் இன்று நல்லபடியாக முடியும். பேச்சில் கவனமாக இருந்து பிரச்சி னையில் இருந்து தப்புவீர்கள். பெரி யோர் ஆசியைப் பெறுவீர்கள்.

**மிதுனம்:** பெற்றோருக்கு விருப்பமான செயல் ஒன்றைச் செய்வீர்கள் கடன் பிரச்சினை தீரும். நட்புவட்டம் விரிவடை யும். உங்கள் மீது அதிகப் பாசம் காட்டு பவரைப் புரிந்து கொள்வீர்கள்.

**கடகம்:** பிறர் நலனுக்காக பாடுபட்டா லும் நற்பெயர் கிடைக்க தாமதமாகும். கவனக்குறைவால் வந்த பிரச்சினை தீரும். நிம்மதியான நாள். திடீர்ச் செல வைச் சமாளித்து வெல்வீர்கள். தர்மம் செய்வீர்கள்.

**சிம்மம்:** நண்பர் சந்திப்பு உண்டு. மன தில் குதூகலம் நிறையும் நாள். திறமை அதிகரிப்பதால் மற்றவர்களால் பாராட் டப்படுவீர்கள். இன்று சுபநிகழ்ச்சிகள் ஏற்பட்டு மனக்குழப்பம் அகலும்.

**கன்னி:** பணிபுரியும் பெண்கள் மகிழ்வார்கள். பகைவர் மனம் மாறு வர். வீட்டில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும். உடல்நலம் மேம்படும். இன்று தேவைக்கு ஓய்வெடுத்து உடல் நலத்தை சீராக்கிக் கொள்வீர்கள்.

**துலாம்:** பெரியோரின் மனம் மகி ழும்படியான செயல்களைச் செய்வீர்கள். குழந்தைகளின் செயலால் ஏற்பட்ட மனஅழுத்தம் தீரும். பணியிடத்தில் நீண்டகாலம் கழித்து பாராட்டைப் பெறு வீர்கள்.

**விருச்சிகம்:** கூடுதல் உழைப்பால் குடும்பத்தின் பொருளாதார நிலை உயரும். வெற்றிவாய்ப்பு அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும். உங்கள் மன தில் இருக்கும் கனவு இன்று செயல் வடிவம் பெறும்.

**தனுசு:** வீண்பழி வராதவாறு கவ னத்துடன் நடந்து கொள்வீர்கள்.அதிர் ஷ்டம் இப்போதைக்கு இல்லை. நன்றாக உழையுங்கள். வீண்பழி ஏற்படுத்தும் சூழலுக்குள் செல்ல வேண்டாம்.

**மகரம்:** அலுவலகத் தகவலை யாரிட மும் சொல்ல வேண்டாம். பேச்சிலும், செயலிலும் கவனமாக இருக்க வேண்டிய நாள். நீங்கள் எதிர்பார்த்த தக வல்கள் சற்றுத் தாமதமாகவே வரும்.

**கும்பம்:** உங்களது பொறுப்புக்களை கவனமாகச் செய்வது நல்லது. பிறரது விடயத்தில் தலையிடாமல் இருங் கள். அதுவே உங்களை உயர்த்தும். பெரியோருக்கான மரியாதையைக் குறைக்காதீர்கள்.

**மீனம்:** சற்று அதிகமாகப் பணிந்து போய் ஜெயிக்க வழிபார்ப்பீர்கள். பழி தரும் செயல்களைச் செய்யாமல் காத்துக் கொள்வீர்கள். வீடு வாங்க எடுத்த முயற்சி வெற்றி பெறும். உழைப்புக் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹரிஸ்ணவி படுகொலை:

# 6 வருடங்கள் கடந்தும் நீதியில்லை

### உறவினர்கள் கவலை



**வவுனியா,பெப்.18**

**பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட, பண்டாரிக்குளம் உக்குளாங்குளம் பகுதியைச் சேர்ந்த, பாடசாலை மாணவி கெங்காதரன் ஹரிஸ்ணவி விவகாரம் தொடர்பில், 6 வருடங்கள் கடந்தும் தீர்வு வழங்கப்படவில்லை என்று உறவினர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

மாணவியின் உறவினர்கள் தெரிவிக்கையில்;

ஹரிஸ்ணவியின் படுகொலையுடன் தொடர்புபட்டவர்கள் கண்டு பிடிக்கப்படவில்லை. இந்தச் செயலைச் செய்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. படுகொலைக்கு நியாயமான தீர்வு கிடைக்கவில்லை. இதனால் பெரும் ஏமாற்றமடைந்துள்ளோம். படுகொலைக்கு நீதி கிடைக்கும் வரையிலும் நாங்கள் போராடி வருகின்றோம். இனியும் காலங்களைக்கடத்தி குற்றவாளி சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிப்பதற்கு இடமளியாமல், நீதித்துறை படுகொலைக்கு உரிய தீர்வு பெற்றுத்தரும் என்று எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றோம் - என்றார். (ஒ-4-18)

## தொட்டிலடிப் பகுதியில் திருடர்கள் நடமாட்டம்!

### பொலிஸாரிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப்.18

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொட்டிலடிப் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் வீட்டு உரிமையாளர் இல்லாத நிலையில் புகுந்த திருடர்கள், வீட்டின் பல இடங்களிலும் தேடுதல் நடத்தியுள்ளனர் என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

குறித்த வீட்டின் கதவை உடைத்து வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் அலுமாரியிலுள்ள உடைகள் போன்றவற்றை வெளியே எறிந்துவிட்டு தேடுதல் நடத்தியுள்ளனர் என்று உரிமையாளரால் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-125)

## காட்டுயானை உயிரிழப்பு கைதானவருக்கு பிணை

முல்லைத்தீவு, பெப். 18

ஒதியமலைகிராமத்தில் கடந்த 15ஆம்திகதி காட்டு யானை உயிரிழந்த சம்பவத்தில் பண்ணை உரிமையாளரான 46 வயதுடைய பெண், வன ஜீவராசிகள் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு தற்போது பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளார்.

கடந்த 15 ஆம் திகதி ஒதியமலை கிராமத்தில் அமைந்துள்ள விவசாயப் பண்ணை ஒன்றின் மின்சார வேலியில் சிக்குண்ட காட்டுயானை உயிரிழந்தது. பண்ணையில் பொருத்தப்பட்டிருந்த மின்சாரவேலி மின்னிணைப்பு ஊடாக அதிகளவான மின்சாரம் பாய்ந்தமையாலே யானை உயிரிழந்ததாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் விவசாயப் பண்ணையின் உரிமையாளரான 46 வயதுடைய பெண் வன ஜீவராசிகள் திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டு, நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இதன்போது மின்சார வேலிக்கான மின்னிணைப்பு இயந்திரங்களும் நீதிமன்றில் சான்றுப் பொருள்களாக முற்படுத்தப்பட்டது.

இதன்போது 5 லட்சம் ரூபா சரீரப் பிணையில் கைது செய்யப்பட்ட பண்ணை உரிமையாளர் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் எதிர்வரும் மே மாதம் 13 ஆம் திகதி வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. அத்துடன் யானை உயிரிழப்பு தொடர்பாக வனஜீவராசிகள் திணைக்கள மருத்துவரின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் நீதிபதியால் உத்தரவிடப்பட்டது. (ஒ-ரி1,19)

## மாணவிகள் கழிவறையில் அதிநவீன சி.சி.ரி.வி. கமரா

### கம்பஹாவில் பரபரப்பு

உயர்தர மாணவர்களுக்கான மேலதிக வகுப்பை நடத்தும் கல்வி நிறுவனமொன்றில், மாணவிகள் பயன்படுத்தும் கழிவறையில் அதி நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய சி.சி.ரி.வி. கமரா பொருத்தப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து கம்பஹா நகர முதல்வருக்குள்ள அதிகாரத்துக்கு அமைவாக, விசாரணைகள் நிறைவுறும் வரையில் அந்த நிறுவனத்தில் மேலதிக வகுப்புக்களுக்கு தடைவிதிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாணவி ஒருவரின் தாயார் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைவாக, மேற்கொள்ளப்பட்ட சோதனையில் குறித்த கமரா கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பில், இதுவரையில் அந்த நிறுவனத்தின் உரிமையாளர், ஆசிரியர்கள் மற்றும் மேலதிக வகுப்பில் பங்கேற்ற மாணவர்கள் உள்ளிட்ட 15பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. இதுவரை கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், மாணவர்கள் சிலரால் குறித்த கமரா பொருத்தப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-4-இ)



## இராணுவத்தினரால் காலணிகள் வழங்கல்

முல்லைத்தீவு, பெப்.18

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட முத்தையன்கட்டுப் பகுதியில் பொருளாதாரம் நலிவடைந்த 267 பாடசாலை மாணவர்களுக்கு நேற்று முன்தினம் இராணுவத்தினரால் காலணிகள் வழங்கி வைக்கப்பட்டது. 64 ஆவது படைப்பிரிவின் 13 ஆவது காலட்படைப்பிரிவின் ஏற்பாட்டில் இவை வழங்கப்பட்டன.

இதில் முத்தையன்கட்டு பிரதேசத்திலுள்ள இடதுகரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, முத்துவிநாயகர் அ.த.க.பாடசாலை மற்றும் இடதுகரை அ.த.க.பாடசாலை ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 267 மாணவர்களுக்கே காலணிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ச-19)

## அபிவிருத்தித் திட்டங்களுக்காக 25 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், பெப்.18

வலி.மேற்கு பிரதேசசபையின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக சபையின் மேலதிக நிதியாக காணப்பட்ட 25 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது.

வலிமேற்கு பிரதேசசபையின் மாதாந்த அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. இதன்படி, சுழிபுரம் - புளியந்துறை சுற்றுலா மையத்துக்கு எல்லை வேலிகளையும், வீதியையும் அமைப்பதற்கு 7மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதியுள்ள 18மில்லியன் ரூபா நிதியானது வலி.மேற்கிலுள்ள 25 கிராம அலுவலர் பிரிவுகளுக்குப் பகிரப்பட்டு அவற்றின் உட்கட்டுமான அபிவிருத்திகளுக்கு பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-125)

## மருத்துவமனையில் சிசு சாவு; விளக்கம் கோரியது அமைச்சு

வவுனியா.பெப்.18

வவுனியா மருத்துவமனையில் சிசுவொன்று உயிரிழந்தமை தொடர்பில், சுகாதார அமைச்சு விளக்கம் கோரியுள்ளது.

சுகாதார அமைச்சின் மருத்துவ சேவைகள் மேலதிக செயலாளர் மருத்துவர் சுனில் டி அல்விஸ், வவுனியா மருத்துவமனை பணிப்பாளருக்கு விளக்கம் கோரி கடிதம் அனுப்பியுள்ளார்.

வவுனியாவைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு மருத்துவமனையில் 7ஆம் விடுதியில் 2020 ஆண்டு டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி பிறந்த சிசுவொன்று உயிரிழந்திருந்தது. இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண், ஜனாதிபதி செயலகம், சுகாதார அமைச்சு மற்றும் ஆளுநர் அலுவலகம் ஆகியவற்றுக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

மருத்துவமனையின் கவனக்குறைவினாலேயே தனது சிசு உயிரிழந்தது என்று அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். இதனையடுத்து சுகாதார அமைச்சு, வவுனியா மருத்துவமனைப் பணிப்பாளரிடம் விளக்கம் கோரி கடிதம் அனுப்பியுள்ளது. (ஒ-4-இ)

### வயல் நிலங்களை மீட்கக் கோரிக்கை

முல்லைத்தீவு - மூங்கிலாறு வடக்கு கிராமத்தில் வனவளத் திணைக்களம் ஆரமித்துள்ள வயல் நிலங்களை விடுவிக்கும் கோரிக்கை புதுக்குடியிருப்பு பிரதேசசபையில் நிறைவேற்றப்பட்டது.

கோரிக்கைக் கடிதத்தை ஜனாதிபதி, காணி அமைச்சர், வனவள அமைச்சர், வடமாகாண ஆளுநர், மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர் ஆகியோருக்கு அனுப்புவதென இதன்போது முடிவு செய்யப்பட்டது. (வ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவிலிருந்து இலங்கைக்கு மீட்சி



பிரதமர் பெருமிதம்

**கொழும்பு, பெப்.18**

**இலங்கை கொரோனாத் தொற்றிலிருந்து மீட்சியடைந்து வருகின்றது -என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.**

ஒக்ஸ்போர்ட் வர்த்தகக் கல்லூரியின் வருடாந்தப் பட்டமளிப்பு விழாவில் அவர் இதனைத் தெரிவித்தார்.

வாழ்க்கையின் மிக முக்கியமான மற்றும் பொன்னான தருணங்களைக் கொண்டாடுவதற்கான வாய்ப்பு கொரோனாவால் இழக்கப்பட்டது. பட்டதாரிகள் தங்கள் பேராசிரியர்கள், பல்கலைக்கழக சக ஊழியர்கள் மற்றும் பெற்றோருடன் தங்கள் வெற்றியைக் கொண்டாட முடியவில்லை.

இந்த நிகழ்வு மிக முக்கியமான திருப்பு முனையாகும்.

தொற்று விளைவுகளிலிருந்து நம் நாடு மீண்டு வரும்போது, தேசத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய கடமை நம் அனைவருக்கும் உள்ளது. தொற்றுநோய்க்குப் பிந்திய கால கட்டத்தில் பொருளாதார மீட்சியை வழிநடத்தக்கூடிய தொழில்முனைவோர் இலங்கைக்குத் தேவை -என்றார்.

பட்டமளிப்பு விழாவில் வர்த்தக முகாமைத்துவம் மற்றும் வர்த்தக நிர்வாகப் பிரிவு பட்டதாரிகள் மற்றும் முதுகலைப் பட்டதாரிகள் 507 பேர் கௌரவிக்கப் பட்டனர். (ஒ-4-இ)



## முல்லை பொலிஸாரால் சிரமதானப் பணிகள்

முல்லைத்தீவு, பெப்.18

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அனைத்துப் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களாலும் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், முள்ளியவளை, மாங்குளம், மல்லாவி, ஐயன்கன்குளம், நட்டாங்கண்டல், கொக்கிளாய் மற்றும் மணலாறு ஆகிய பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர்.. (ச-19)

### ‘குற்றவியல்நீதி’...

நாடுகள் அலுவலகத்தின் ஊடாக ஏற்கனவே சேகரிக்கப்பட்ட தகவல்கள், ‘குற்றவியல் நீதி’ என்ற கோணத்தில் மீண்டும் ஆராய்வுக்கு உட்படுத்தப்படும்.

இவ்வாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் மனித உரிமைகள் அதிகாரியான லிவியா கொசென்ஸா தெரிவித்தார்.

‘இலங்கை தண்டனையிலிருந்து பாதுகாப்புப்பெறும் போக்குக்கு எதிரான போராட்டத்தை வலுவூட்டுதல்’ என்ற தலைப்பில் நிகழ்நிலை கலந்துரையாடல் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட 6/1 தீர்மானத்தின் ஊடாக வழங்கப்பட்ட பொறுப்புக்கூறல் பற்றிய ஆணையை நடைமுறைப்படுத்தும் பணிகள் 2021 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டன.

இந்தச் செயற்றிட்டத்தின் ஊடாகக் கண்டறியப்பட்ட தகவல்கள் எதிர்வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரால் சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

இலங்கையில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கான ஏனைய வழிமுறைகளை உள்ளடக்கிய விரிவான அறிக்கை எதிர்வரும் செம்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படும்.

‘இலங்கை பொறுப்புக்கூறல் செயற்றிட்டம்’ சர்வதேச குற்றவியல் மற்றும் மனித உரிமைகள் சட்டம், பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகள், பாதிக்கப்பட்ட தரப்பினரின் உரிமைகள் மற்றும் தகவல் முகாமைத்துவம் உள்ளடங்கலாக பல்வேறு முக்கிய விவகாரங்களில் தேர்ச்சிபெற்ற ஊழியர்களின் பங்களிப்புடன் செயற்படுகின்றது.

இன்னும் பல ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இந்தப் பணிகளில் ஈடுபடும் குழுவினர் ஜெனிவாவைத் தளமாகக் கொண்டியங்குவதுடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அதிகாரத்தின் சர்வதேச சட்டங்களுக்கு முரணான வகையில் இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்முறைகள் மற்றும் மீறல்கள் தொடர்பாக ஆராய்வதற்கென உருவாக்கப்பட்டுள்ள இந்தச் செயற்றிட்டத்தின் ஊடாக அத்தகைய சம்பவங்கள் தொர்டர்பான ஆதாரங்கள் திரட்டப்பட்டு, அவை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு, பாதுகாப்பான முறையில் களஞ்சியப்படுத்தப்படும்.

அதேவேளை, இந்த விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் ஊடாக ஏற்கனவே சேகரிக்கப்பட்ட தகவல்கள், ‘குற்றவியல் நீதி’ என்ற கோணத்தில் மீண்டும் ஆராய்வுக்கு உட்படுத்தப்படும். எதிர்காலத்தில் பொறுப்புக்கூறல் பொறிமுறையை வலுப்படுத்துவதற்குரிய செயற்றிட்டம் உருவாக்கப்படுவதுடன் அது பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்தியதாக அமையும் - என்றார். (அ-எ-இ)

### கச்சதீவு...

ஆரம்பித்த கடற்றொழில் அமைச்சர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக இலங்கைப் பக்தர்கள் கலந்துகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது, பக்தர்கள் எவரும் கலந்துகொள்ள முடியாது என்று கொழும்பில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவம் நடைபெறவுள்ளது. திருவிழாவுக்கான முன்னாயத்தக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றபோது, இலங்கையைச் சேர்ந்த 500 பக்தர்களைத் திருவிழாவுக்கு அனுமதிப்பது என்றும், இந்தியப் பக்தர்களை இந்த முறை அனுமதிப்பதில்லை என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

தற்போதுள்ள கொரோனாப் பரவல் நிலைமையைக் கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அதன்பின்னர் [illegible] தங்கள் நாட்[illegible] திக்க வேண்டும் என்று தமிழகத்தில் இருந்து கோரிக்கைகள் எழுந்திருந்தன. இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்திருந்த கடற்றொழில் அமைச்சர், கச்சதீவுத் திருவிழாவுக்கு தமிழகத்தைச் சேர்ந்தவர்களையும் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார். இது தொடர்பான கோரிக்கை சுகாதார அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருந்தது. இந்த நிலையில், தற்போது இருநாட்டுப் பக்தர்களையும் திருவிழாவுக்கு அனுமதிப்பதில்லை என்று சுகாதார அமைச்சால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்தியப் பக்தர்களை அனுமதிக்க முடியாத சூழ்நிலை இருப்பதால், பிரச்சினைகளைத் தவிர்க்கும் நோக்குடன் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிகின்றது. (அ-எ-இ)

### ஆசை...

50 ஆயிரம் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது.

சித்தன்கேணியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு வந்த தொலைபேசி அழைப்பில் பேசியவர்கள், அதிர்ஷ்ட லாபச் சீட்டில் பெருமளவு பணம் கிடைத்துள்ளது, அதைப் பெறுவதற்கு ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபாவை இலங்கை வங்கியில் வைப்பிலிட வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

அதை நம்பிய அந்தப் பெண் தன்னுடைய தங்க நகைகளை அடகு வைத்து, அவர்கள் அனுப்பிய வங்கிக் கணக்கிலக்கத்தில் பணத்தை வைப்பிலிட்டுள்ளார். அதன்பின்னர் அந்தத் தொலைபேசி இலக்கம் இயங்கவில்லை. தற்போது அந்தப் பெண் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சங்கரத்தை, துணைவியைச் சேர்ந்த ஆண் ஒருவரைத் தொலைபேசி ஊடாகத் தொடர்புகொண்டவர்கள் வெளிநாட்டில் இருந்து பொதி ஒன்று வந்துள்ளது என்றும், அதை 50 ஆயிரம் ரூபா பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் கூறியுள்ளனர். பணத்தை வைப்பிலிடுவதற்கான வங்கிக் கணக்கிலக்கம் ஒன்றையும் கொடுத்துள்ளனர். அதை நம்பிய அவர், பணத்தை வைப்பிலிட்ட பின்னர், அந்தத் தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பு எடுத்துள்ளார். ஆயினும் அந்தத் தொலைபேசி இலக்கம் அதற்குப் பின்னர் இயங்கவில்லை. இது தொடர்பாகவும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான ஏமாற்று வேலைகள் முன்னரும் வடக்கில் நடந்துள்ளன. பலர் இலட்சக்கணக்கில் பணத்தை இழந்துள்ளனர். இவ்வாறான மோசடிகள் தொடர்பாக அவதானமாக இருக்க வேண்டும் என்று பொலிஸார் பொதுமக்களுக்குப் பல முறை எச்சரிக்கை வழங்கியபோதும், தொடர்ந்தும் மக்கள் ஏமாற்றுப் பேர்வழிகளின் வலையில் சிக்கி வருகின்றனர். (அ-எ-இ)

### போராட்டத்தால்...

மூன்றாம் வருட மாணவர்களுக்கான, முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்றும், நேற்று நடத்தப்பட்ட போராட்டத்தால் பரீட்சை நடைபெறவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுப் பரீட்சைக்கான தயார்படுத்தல்களுடன் மாணவர்கள் சென்றபோதும், ஒன்றியம் அமைக்கக் கோரி பல்கலைக் கழக வாயிலை மூடிப் போராட்டம் நடத்தப்பட்டதால் மாணவர்களும், ஊழியர்களும் உட் செல்ல முடியாத நிலைமை காணப்பட்டது.

கொரோனாப் பெருந்தொற்றின் காரணமாக கற்றல் நடவடிக்கைகள் ஏற்கனவே மந்த கதியில் நடைபெறும் நிலையில், பரீட்சை தடைப்பட்டமை தொடர்பில் மாணவர்கள் பலரும் விசனித்ததைக் காணமுடிந்தது. குறிப்பாக வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் பரீட்சைக்காக அங்கிருந்து வந்தபோதும், போராட்டத்தால் பரீட்சைகள் நடைபெறாததால் ஏமாற்றத்தையும், அசௌகரியங்களையும் எதிர்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னைய காலங்களில் இவ்வாறான போராட்டங்கள் பரீட்சையைக் குழப்பும் வகையில் இடம்பெறுவதில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 19.01.2022 ஆம் திகதியன்று பிரான்ஸில் சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவி

## அமரர்
## கனகாம்பிகை கனகசுந்தரம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியையும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (18.02.2022) வெள்ளிக்கிழமை பிரான்ஸில் நடைபெறுகின்றது.

எங்கள் குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தியறிந்து நேரில் வந்து அனுதாபம் தெரிவித் தோர் மற்றும் தொலைபேசி, சமூகவலைத் தளங்கள் ஊடாகவும் எமக்கு ஆறுதல் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டோர்களுக்கும், மலர்வளையங்களை அனுப்பியிருந்த உறவுகளுக்கும், நிகழ்வினை சீராக ஒழுங்கமைத்துத் தந்த நல்லுள்ளங்களுக்கும் எமது குடும் பத்தின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பிரான்ஸ்**
**கனகபதி,**
**வட்டாரம் இல.06, புங்குடுதீவு.**

**திரு.திருமதி க. சிவகரன் பதுமா**
**திரு.திருமதி மோகனா சிவதாஸ்**
**திரு.திருமதி கலாவதி சிவராஜா**
**திரு.திருமதி சிவானந்தி பாலசுந்தரம்**
**குடும்பத்தினர்**

(cs 42972) (2.6)

# அறிவித்தல்
## செட்டிகுளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
## செட்டிகுளம்

### கிளைக்குழுத்தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டம் - 19.02.2022

வெங்கலச்செட்டிகுளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுத் தெரிவிற் கான கிளைப்பொது சபைக் கூட்டம் 19.02.2022 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் பின்வரும் விபரப்படியாக குறிப்பிடப்படும் இடங்களில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றேன்.


| இல | கிளையின் பெயர் | கிளை இல | பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01 | செட்டிகுளம் | 01 | செட்டிகுளம் கிராம அபிவிருத்திச் சங்கம் கட்டடம், செட்டிகுளம் |
| 02 | முகத்தான் குளம் | 02 | முகத்தான் குளம் அ.த.க.பாடசாலை முகத்தான்குளம், செட்டிகுளம் |
| 03 | முதலியார் குளம் | 03 | முதலியார்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, முதலியார்குளம், செட்டிகுளம் |
| 04 | அடப்பங்குளம் | 04 | துட்டுவாகை வீரமாணிக்கம் திருமகள் வித்தியாலயம், அடப்பன்குளம் செட்டிகுளம் |
| 05 | சின்னசிப்பிகுளம் | 05 | தாருலுலும் முஸ்லீம் வித்தியாலயம் சின்னசிப்பிகுளம் செட்டிகுளம் |
| 06 | வீரபுரம் | 06 | வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயம், வீரபுரம், செட்டிகுளம் |
| 07 | வாரிக்குட்டியூர் | 07 | கணேஸ்வரா மகா வித்தியாலயம், வாரிக்குட்டியூர், செட்டிகுளம் |
| 08 | பெரியதம்பனை | 08 | பெரியதம்பனை அ.த.க.பாடசாலை, பெரியதம்பனை செட்டிகுளம் |
| 09 | ஆண்டியபாபுளிங்குளம் | 09 | ஆண்டியாபுளியங்குளம் முஸ்லிம் வித்தியாலயம், ஆண்டியாபுளியங்குளம் செட்டிகுளம் |
| 10 | பாவற்குளம் யுனிற்02 | 10 | அல்அமீன் முஸ்லீம் வித்தியாலயம், பாவற்குளம், யுனிற் 02, செட்டிகுளம் |
| 11 | சூடுவெந்தபுலவு | 11 | றிசாத் பதியுதீன் முஸ்லிம் வித்தியாலயம், சூடுவெந்தபுலவு செட்டிகுளம் |
| 12 | மெனிக்பாம் | 12 | அருவித்தோட்டம் சிவானந்தா வித்தியாலயம், மெனிக்பாம் செட்டிகுளம் |

கூட்ட அழைப்புக்கடிதம் கிடைக்கப்பெறாத அங்கத்தவர்கள் இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்கலாம்.

**செயலாளர்,**
**செட்டிகுளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)**
**செட்டிகுளம்**

(CS 00967) (3/6)

# 4 ஆம் ஆண்டு நீங்கா நினைவில்



## அமரர் சின்னப்பு கெங்காதரன்

பிரபல மில் லொறி உரிமையாளர்

**தோற்றம்** 01.12.1947 — **மறைவு** 03.03.2018

அப்பா என்ற வலிமையை நீங்கள் இல்லாத
காலங்கள் எமக்கு உணர்த்துகின்றன
இப்போது நாம் வாழும் வாழ்வின்
பெருமைகளுள் உங்கள் வியர்வைத்
துளிகள்தான் ஒளிந்து மெருகூட்டுகின்றன

பிள்ளைகளை வளர்ப்பது பெற்றோரின்
கடமை என்பதையும் மீறி உங்கள் எல்லையற்ற
அன்பால் அரவணைப்பால் எங்களைச் சிறப்புற
வாழவைத்து அதைப் பார்த்து மகிழாமல்
பாதியில் சென்றுவிட்டீர்கள்
நிஜமான உங்களை எங்கள் அருகில் வைத்து
வாழ ஆசைப்படுகிறோம்
ஆனால் நீங்கள் நிழலைக்கூடத் தராமல்
நினைவுகளைத்தான் தந்துவிட்டுச் சென்றுள்ளீர்கள்

நாம் மறையும் மட்டும் உங்கள் கம்பீரத்
தோற்றம் எங்களின் மனதை விட்டு மறையாது
உங்கள் அன்பில் வளர்ந்த நாங்கள்
எங்கள் அன்பில் உங்களை வளர்த்திடும்
பாக்கியம் எமக்கு கிடைக்காதோ
என ஏங்குகின்றோம்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
பிராயடி வைரவரும் நுணுவில் பிள்ளையாரினதும்
அருள் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

[illegible] வடக்கு,
சாவகச்சேரி.

என்றென்றும் உங்கள் நினைவுடன் வாழும்
**மனைவி, மகன்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்வி மனு

வடமராட்சியில் உள்ள ஆலயத்தின் நிலத்துக்கு தெராசோ போடுவதற்கான கேள்வி மனு சுமார் 8000 சதுர அடி கிறே அல்லது சந்தணகலர் இடையே பூ வேலைப்பாடு. 25.02.2022 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

வி /இல. JF 1036
C/O உதயன் பிரதேச காரியாலயம்
மாலுச்சந்தி, அல்வாய்.

## வேலையாள் தேவை

**Kabris Kingdom**
**Fast Food Restruant**

மேற்படி முகவரி நிலையத்திற்கு Bike Rider, காசாளர் தேவை. தங்குமிட வசதி ஏற்படுத்தித்தரப்படும். சம்பளம் நேரில் பேசப்படும். தொடர்பு:

**077 343 8373, 077 9053 923**

(CS 18457) 1-6


# மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 02 . 1954



மறைவு 16 . 02 . 2022

## சபாபதிப்பிள்ளை தங்கமயில்

**(ஓய்வுபெற்ற இலங்கை மின்சார சபை ஊழியர், மட்டக்களப்பு)**

வளலாய் கிழக்கை பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வதிவிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை தங்கமயில் கடந்த (16.02.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை மாணிக்கம் தம்பதியரின் கனிஸ்ர புத்திரனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி ஜேனம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அன்புமலரின் அன்புக் கணவரும், அண்ணாமலை, நவரட்ணம் சிவலிங்கம், நேசரத்தினம், சத்தியபாமா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற றோசலீன் அருமைநாயகத்தின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2022) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CR 7291) 1-6

# மரண அறிவித்தல்



## திருமதி ஆதுஷன் தர்சிகா

(விற்பனை ஆலோசகர் - செலிங்கோ இன்சூரன்ஸ் - சாவகச்சேரி கிளை)

பூதர்மடம், கோப்பாய் வடக்கினை பிறப்பிடமாகவும், ஆறுகால்மடம், ஆனைக் கோட்டையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆதுஷன் தர்சிகா (விற்பனை ஆலோசகர் - செலிங்கோ இன்சூரன்ஸ் - சாவகச்சேரி கிளை) நேற்றுமுன்தினம் (16.02.2022) புதன்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் குணம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் வசந்தா தம்பதியரின் மருமகளும், ஆதுஷனின் பாசமிகு மனைவியும், தனுஜா, காலஞ்சென்ற தர்சீலன் ஆகியோரின் சகோதரியும், தாருஜனின் பாசமிகு தாயாரும், கமல்ராஜ், துவாரகன், கிருஷாந்தன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கோப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cs42621) (2.6)

# மரண அறிவித்தல்



## செல்லத்துரை செல்லையா (சின்னத்துரை)

மந்துவில் வடக்கு, கொடிகாமம் குடியிருப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை செல்லையா (சின்னத்துரை) நேற்று (17.02.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை செல்லம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்ற மகாலக்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற உதயக்குமாரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, தாமோதரம் பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், தா.இரத்தினத்தின் மைத்துனரும், கணேசபாலேந்திரன் (ஓய்வுநிலை அதிபர்-யா/கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம்), தவராசா (மக்கள் வங்கி - யாழ்ப்பாணம்), இராஜகுமாரி (மலேசியா), தர்மராஜா (லண்டன்), கலையுணர்பவன் (கனடா) ஆகியோரின் பெரிய தந்தையும், சிவறஞ்சினி, வாணிஸ்ரீ (ஆசிரியர்-யா/வரணி மத்திய கல்லூரி), சுரேஸ்குமார் (மலேசியா), மைத்ரேஜி (லண்டன்), சிவசுகி (கனடா), கலைச் செல்வன்-தர்சிகா (லண்டன்), கதிர்ச்செல்வன் (மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்)-நித்தியா, கலையழகன், கலைவேந்தன் (புகையிரத நிலைய அதிபர் - கொழும்பு கோட்டை), ஜீவிதன் (மாணவன்), பிரணவன், திவ்யன், மாதினி, றிதிக்கா, வர்சிகா, லக்கீஸ் ஆகியோரின் பேரனும், அக்ஷயனின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மந்துவில் வடக்கு கொடிகாமத்தில் உள்ள எமது இல்லத்தில் இன்று (18.02.2022) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு இடம்பெற்று, பின் பூதவுடல் ஞானிகாடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும். ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**தா.கணேசபாலேந்திரன் (பெறாமகன்)**
**(ஓய்வுநிலை அதிபர்)**

(CS 184..) 1/6

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 09 . 1949



மறைவு 17 . 02 . 2022

## சின்னத்துரை நாகேஸ்வரி (குஞ்சா)

கிளானை, கொல்லங்கலட்டி தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் புத்தூர் வீதி, புன்னாலைக்கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நாகேஸ்வரி (குஞ்சா) அவர்கள் நேற்று (17.02.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை கதிரமலை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்துரை அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், அம்பிகாதேவி, விமலாதேவி, காலஞ்சென்றவர்களான வியாகேசன் (பிள்ளையார்), காங்கேசன் (சின்னாம்பி), குகதாசன் (ரவி) மற்றும் ரதிதேவி (வெள்ளையம்மா), பிரம்மளாதேவி (பிள்ளை-லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் தேவகி (தேவா), துவாரகை (துவா), அமரர் ஜீவகி (ஜீவா), அமரர் கிருஸ்ணகுமார் (தம்பி), சியாமளா (ராதா) ஆகியோரின் அன்புத் தாயும், தவேந்திரநாதன் (ராசன்), யுவராஜ், கசீதன் ஆகியோரின் மாமியாரும், தர்சிகா-ராஜ்கண்ணா, பிரதீப், திலக்ஷன், திலக்ஷிகா, டிலானி, யதுஷன், திவானி, டினுஷன், ரிதுஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (17.02.2022) வியாழக்கிழமை புன்னாலைக் கட்டுவன் தெற்கு விலங்கன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 18453) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச சேவையை பாதிக்காதவாறு

# தாதியர்கள் கோரிக்கையை நிறைவேற்றுமாறு பணிப்பு!

கொழும்பு, பெப்.18
அரச சேவைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தாதியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அதிகாரிகளுக்கு நேற்று ஆலோசனை வழங்கியுள்ளார்.
தாதியர் சங்கங்களின் பிரதிநிதிகளை சந்தித்த போதே ஜனாதிபதி இவ்வாறு ஆலோசனை வழங்கினார் என்று அவரது ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
முருதெட்டுவே ஆனந்த தேரர் உட்பட அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் பிரதிநிதிகள் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று ஜனாதிபதியை சந்தித்தனர்.
தாதியர் பல்கலைக்கழகத்தை ஆரம்பித்தல், பதவி உயர்வு வழங்கும் பொறிமுறை, கடமை நேரம், மருத்துவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுக்கு ஏற்ப 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்கல், சீருடை கொடுப்பனவு உள்ளிட்ட தொழிற் சங்கங்களின் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.
ஒரு தரப்பினரின் கோரிக்கைகளை நிறைவேற்றும் போது மற்றுமொரு தரப்பினர் மீண்டும் கோரிக்கைகளை முன்வைக்கின்றனர். தற்போது காணப்படும் நிதி நெருக்கடிக்கு மத்தியில் அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்ற முடியாது என்று இதன் போது ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.
(எ-இ)

## லிற்றில் எய்ட் நடத்தும் ஆக்கத்திறன் போட்டி

கிளிநொச்சி, பெப்.18
கிளிநொச்சி லிற்றில் எய்ட் திறன்விருத்தி மையத்தால் 18 வயதுக்குட்பட்டோருக்கான கவிதை , கட்டுரை, சிறுகதைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. தொழில்நுட்பம், கல்வி, பொருளாதாரம், சமூகம் மற்றும் வாழ்வியலை மையப்படுத்தி ஆக்கங்கள் அமையலாம். ஆக்கங்களை மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியவாறு ittleaidsl@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது லிற்றில் எய்ட், கனகராசா வீதி, திருநகர், கிளிநொச்சி என்ற தபால் முகவரிக்கோ அனுப்பமுடியும் என நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். (வ-இ)


## வீடு வாடகைக்கு உண்டு

ஆஸ்பத்திரி வீதியில் (கொட்டடி) யாழ்ப்பாணம்
4 படுக்கை அறைகள் கொண்ட
பாவனைக்குரிய மேல்மாடியுடன் நாற்சார்
வீடு வாடகைக்குண்டு.
074 226 8655, 077 738 0509


## கண்ணீர் அஞ்சலி



சிறீவாசம்
கருவேலடி வீதி,
கொக்குவில் கிழக்கு

கொக்குவில் கிழக்கு - காட்டுப்புலம்
முருகமூர்த்தி கோயில் முன்னை நாள் அர்ச்சகர்
**திரு. வைத்தியநாத வெங்கடேச சர்மா**
(கோபால் ஐயர்)
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தர்மகர்த்தா திரு. சு சண்முகராசா**
**S.K. சேனாதிராசா குடும்பத்தினர்**

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 23.09.1956 இறப்பு 12.02.2022

எமது மாவட்ட சித்த மருத்துவமனையில்
மருத்துவ உத்தியோகத்தராக கடமை
புரியும் **செல்வி Dr.S.தர்சினி**
அவர்களின் அன்புத் தந்தையார்
**தம்பிராசா சபாரத்தினம்**
அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு
பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**பிரிவுத் துயரில்**
**ஆயுள்வேத ஒருங்கிணைப்பாளர்,**
**மருத்துவ அத்தியட்சகர் மற்றும்**
**மருத்துவ உத்தியோகத்தர்கள், பணியாளர்கள்**
**மாவட்ட சித்த மருத்துவமனை,**
**புதுக்குடியிருப்பு, கைவேலி, முல்லைத்தீவு.**

(CS 18451)1-6

## வலிகாமம் தென்மேற்குபிரதேச சபை, மானிப்பாய்.
## கடைகள் வாடகைக்கு வழங்குதல் - 2022

மானிப்பாய் சந்தை கடைத்தொகுதியின் 10 மேற்தள கடைகள் கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப் பட்டவாறு வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக்கூடிய ஒரேமுறையில் செலுத்தக் கூடிய ஒருங்கிணைக்கப்பட்ட தொகைக்கான கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட நிபந்தனைக்கமைய வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையால் கோரப்படுகின்றது.

**கேள்விப்பத்திரம் வழங்கும் காலப்பகுதி** : 2022.02.21 முதல் 2022.03.10 வரை அலுவலக நாட்களில்
**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி** : 2022.03.11 பி.ப 2.00 மணி
**கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி** : 2022.03.11பி.ப 2.00மணி
**கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம்** : வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகம்

**நிபந்தனைகள்:-**

01. விண்ணப்பதாரர் இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
02. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசியஅடையாளஅட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமூகமளிக்க வேண்டும். அத்துடன் கிராம அலுவலரால் வழங்கப்பட்டு, பிரதேச செயலரால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகிய 2ஐயும் பூரணப்படுத்தி கடித உறையிலிட்டு "தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென் மேற்குப் பிரதேசசபை, மானிப்பாய்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின்பெயரை தெளிவாக குறிப்பிட்டு மூலப்பிரதி, இணைப்பிரதி எனக்குறிப்பிட்டு 2022.03.11ஆம் திகதி பி..ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்படடுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்பட வேண்டும். அதன் பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
04. மாதாந்தக்கடை வாடகையாக பிரதேசசபையால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் தொகையை செலுத்த வேண்டும் என்பதுடன் குறித்த மாத வாடகைப் பணத்தை ஒவ்வொரு மாதம்31 ஆம் திகதிக்கு முன்வரும் வேலை நாளில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற வேண்டும் தவறுமிடத்து அதற்கான மாதக்கட்டணத்துடன் மாத வாடகைக்குரிய தண்டப்பணம் 10% மேலதிகமாக அறவிடப்படும்.
05. கேள்விச்சித்திகாரராக தெரிவுசெய்யப்படுவோர் கேள்வித்தொகையை பிரதேசசபையால் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னர் முழுமையாகச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்டு பிரதேசசபையுடன் ஒப்பந்தத்தினை செய்து கொள்ள வேண்டும்.
06. சித்திகர குத்தகைக்காரர் வலிகாமம் தென் மேற்குப் பிரதேசசபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்குக் கட்டுப்படுதல் வேண்டும்.
07. சித்திகர குத்தகைக்காரர் பாதுகாப்பு வைப்புப்பணமாக 03 மாத வாடகைத் தொகையினை முற்பணமாகச் செலுத்த வேண்டும்.
08. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக்கட்டணத்தை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச் சான்றிதழையும் பெற்றுக் கொள்ளவேண்டும்.
09. கேள்விப்பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பெறுகைக்குழுவிற்கு உண்டு..
10. மேலதிக விபரங்களை வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம் தொடர்புகளுக்கு 021 225 5381 / 021 225 6646

| இல | சந்தைக கடை இல | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | கேள்விவைப்புப் பணம் | ஆகக் குறைந்த கேள்வித்தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| மானிப்பாய் பட்டின உப அலுவலகம் | | | | | |
| 01 | 1U | 1,000.00 | 6000.00 | 600,000.00 | 2000.00 |
| 02 | 2U | 1,000.00 | 6000.00 | 600,000.00 | 2000.00 |
| 03. | 3U | 1,000.00 | 6000.00 | 600,000.00 | 2000.00 |
| 04 | 4U | 1,000.00 | 6750.00 | 675,000.00 | 2250.00 |
| 05 | 5U | 1,000.00 | 6750.00 | 675,000.00 | 2250.00 |
| 06 | 6U | 1,000.00 | 6750.00 | 675,000.00 | 2250.00 |
| 07 | 7U | 1,000.00 | 6750.00 | 675,000.00 | 2250.00 |
| 08 | 8U | 1,000.00 | 6750.00 | 675,000.00 | 2250.00 |
| 09 | 9U | 1,000.00 | 6750.00 | 675,000.00 | 2250.00 |
| 10 | 10U | 1,000.00 | 6750.00 | 675,000.00 | 2250.00 |

**மீள் கேள்வி அறிவித்தல்**

| இல | சந்தைக் கடையின் விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்விவைப்புப் பணம் | ஆகக் குறைந்த கேள்வித்தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| மானிப்பாய் பட்டின உப அலுவலகம் | | | | | |
| 01 | மானிப்பாய்புளியடிச் சந்தைக்கடை | 1,000.00 | 3600.00 | 360,000.00 | 1200.00 |

**அ.ஜெயகேசன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்குபிரதேச சபை, மானிப்பாய்.** **17.02.202**

(cr.37597(2.6)

## மரண அறிவித்தல்



### அம்பலவாணர் பஞ்சாட்சரம்

காரைநகர் மணற்பிட்டியை பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டை கலட்டி தாவளை வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் பஞ்சாட்சரம் நேற்று (17.02.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் அம்பலவாணர் சின்னம்மாவின் அருமை மகனும், முத்தையா சிவக்கொழுந்துவின் அன்பு மருமகனும், நவமணியின் அன்புக் கணவரும், அமரர்களான சோதிநாதன் கனகசபை மற்றும் கமலாதேவியின் அன்புச் சகோதரனும், இராமகிருஸ்ணன், இராதாகிருஸ்ணன், பாலகிருஸ்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சௌந்தராம்பிகை, மனோறஞ்சித மலர், சிவதர்சினி ஆகியோரின் மாமனும், லதாங்கி, பிரணவன், மகிந்தன், அபிதன் ஆகியோரின் அன்புப் பேரனும், தில்லைநாதனின் அன்பு மைத்துனரும், மங்கையற்கரசியின் சகலனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2022) வெள்ளிக்கிழமை பி.ப 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 949 1016**
**075 225 7907**
**077 688 9101**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா....

டால் அதை எதிர்கொள்ள நாம் தயாராகவே இருக்கின்றோம். எந்தத் தரப்பும் எமக்குச் சவால்விட முடியாது.

இவ்வாறு ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜெனிவாவில் இந்தமுறை இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளரின் எழுத்துமூல அறிக்கை மாத்திரமே முன்வைக்கப்படவுள்ளது. இலங்கைக்கு எதிராக எந்தப் பிரேரணைகளும் கொண்டுவரப்படமாட்டாது.

ஏற்கனவே இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் தற்போது அலட்டிக்கொள்ள நாம் விரும்பவில்லை. ஏனெனில் அந்தத் தீர்மானங்கள் தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தமது நிலைப்பாட்டை சர்வதேசத்துக்கு அறிவித்துவிட்டார்.

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக ஏதாவது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டால் அதை எதிர்கொள்ள நாம் தயாராகவே இருக்கின்றோம். நாட்டின் இறையாண்மையை மீறி எந்தத் தரப்பும் எமக்குச் சவால்விட முடியாது; நாமும் அடிபணியத் தயாரில்லை - என்றார். (அ-எ-22)

## கொரோனா:...

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஆயினும் மருத்துவமனையில் சேர்க்கப்படும்போதே அவர் உயிரிழந்திருந்தார்.

அவரது உடலில் இருந்து பெறப்பட்ட உயிரியல் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில், அவருக்குக் கொரோனாத் தொற்றிருந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனாத் தடுப்பு சுகாதார நடைமுறைகளுக்கு அமைய அவரது உடல் தகனம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## கடப்பாட்டை...

பட வேண்டும்.

-இவ்வாறு உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள்நிகழாமை ஆகியவற்றை வலுப்படுத்துதல் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் விசேட அறிக்கையாளர் பாப்லோ டி கிரீஃப் வலியுறுத்தியுள்ளார்.

'இலங்கையில் தண்டனையிலிருந்து பாதுகாப்புப்பெறும் போக்குக்கு எதிரான போராட்டத்தை வலுவூட்டுதல்' என்ற தலைப்பில் நிகழ்நிலை கலந்துரையாடல் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் பாதிக்கப்பட்ட தரப்பினர் பொறுப்புக்கூறலைக் கோரவில்லை, பொருளாதார ரீதியான அபிவிருத்தியே அவர்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது என்று முன்னைய ராஜபக்ச அரசாங்கம் கூறிவந்தது. அந்தக் கருத்தில் எந்த உண்மையும் இல்லை.

அதேவேளை, நல்லாட்சி அரசாங்கத்தின் ஜனாதிபதியும், பிரதமரும் நிலைமாறுகால நீதி தொடர்பில் உரியவாறானதும், தெளிவானதுமான பொறிமுறை ஒன்றை உருவாக்கத் தவறிவிட்டனர். விரிவான ஓரின முறைமையின் ஊடாக நீதியையோ, பாதுகாப்பையோ அடைய முடியாது என்பதைப் பெரும்பான்மையினர் புரிந்துகொள்ளவேண்டும்.

இலங்கையின் பெரும்பாலான அரசாங்கங்கள் சர்வதேசத்தின் பொது நிலைப்பாட்டைத் திருப்திப்படுத்துவதிலேயே கவனம் செலுத்தின. அவர்களுக்குரிய கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் அவதானம் செலுத்தவில்லை. பாதிக்கப்பட்ட தரப்பினரின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் அதன் வளங்களை முழுமையாகப் பயன்படுத்த முடியும். ஆனால் கடந்த காலங்களில் இலங்கையுடன் இணைந்து பணியாற்றியபோது நான் அவ்வாறு அவதானிக்கவில்லை.

காணாமலஆக்கப்பட்டோர் அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் என்பவற்றைத் தொடர்ந்து தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகமும் உருவாக்கப்பட்டது. ஆயினும் அவை உரிய பொறிமுறை ஒன்றைக் கொண்டிருக்கவில்லை. அதன் பொறிமுறையைப் பயன்படுத்தி பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான மிகச் சொற்பமான பணிகளை மட்டுமே செய்ய முடியும்.

இலங்கையை சரியான பாதையில் நகரச் செய்வதற்கான வலுவான அழுத்தங்களைப் பிரயோகிப்பதில் ஐக்கிய நாடுகள் சபையால் மிகையான பங்களிப்பை வழங்கமுடியும். இதில் வெவ்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் ஐ.நா. தலைமை அலுவலகம் எவ்வாறு செயற்பட்டது என்பதை விளக்குவது கடினம் என்பதோடு, அது பெருமளவுக்குப் பயன்தராது.

மறுபுறம் இலங்கையின் சிவில் சமூகங்கள் மிகவும் விரிவானவையாகக் காணப்படுகின்றபோதும், அவை ஒரு வலையமைப்பாக உருவாகுவதற்குத் தவறியிருக்கின்றன - என்றார். (அ-எ-இ)

## எரிபொருள்...

மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்தொடர்ந்தும்நஷ்டத்தைஎதிர்கொண்டு வருவதால், அதைத் தொடர முடியாது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் விலைகளை அதிகரிக்க வேண்டும் என்று கடந்த சில நாள்களாகத் தொடர்ச்சியாக நிதியமைச் சைக் கோரி வருகின்றது.

சர்வதேச சந்தையில் எரிபொருள் நிலை அதிகரித்துள்ள நிலையில், தற்போது நஷ்டத்தின் மத்தியிலேயே எரிபொருள் வழங்கல் நடைபெறுகின்றது என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சுட்டிக்காட்டியிருந்தது. (அ-எ-இ)

## தீக்காயத்தால்...

சேர்ந்த ஆருசன் தர்சிகா (வயது-30) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் கடந்த 9ஆம் திகதி மண்ணெண்ணெய் குக்கரில் சமைக்கும் போது, குக்கருக்கு மண்ணெண்ணெய் ஊற்றியுள்ளார். அப்போது அவர் மீது தீப்பற்றியது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் நேற்று மேற்கொண்டார். (அ-எ-26)

## அப்பாவிகளை...

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி குற்றவாளிகளைத் தப்பிவிட்டு அப்பாவிகளையே ஆட்சியாளர்கள் சிறையில் அடைத்து வருகின்றனர்.

இவ்வாறு கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும் என்று வலியுத்தி மக்களிடம் கையெழுத்துப் பெறும் மனுவில் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் கையெழுத்திட்டுள்ளார். அது தொடர்பில் அவரிடம் ஊடகங்கள் வினவியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல் சம்பவத்தையடுத்து இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி பலர் சிறையில் அடைக்கப்பட்டனர். ஆனால், தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னமும் நீதி வழங்கப்படவில்லை. குற்றவாளிகளைத் தப்பிவிட்டு அப்பாவிகளைச் சிறையில் அடைத்தால் எப்படி நீதி கிடைக்கும்? அதனால்தான் இன்று நாம் சர்வதேசத்திடம் நீதி கோரி நிற்கின்றோம்.

இந்தப் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தால் வடக்கு - கிழக்கு, தெற்கு என நாடெங்கும் வாழும் மக்கள் பலர் துன்பங்களைச் சந்தித்துள்ளனர். அப்பாவிகளைச் சிறையில் அடைக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் எதற்கு? இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும் அல்லது முழுமையாக மாற்றப்பட வேண்டும். இதை வலியுறுத்தியே அதற்கான மனுவில் நான் கையெழுத்திட்டுள்ளேன் - என்றார். (அ-எ-22)

## போர்க்...

களுக்கு எதிராக ஏனைய நாடுகளின் அரசாங்கங்கள் தடை விதிக்க முடியும். தடை விதிப்பு என்பது பொறுப்புக்கூறல் செயன்முறையின் ஒரு பகுதி மாத்திரமே. பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான ஏனைய நடவடிக்கைகள் சிவில் சமூக அமைப்புக்களின் ஊடாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு சட்டத்தரணியும் சர்வதேச குற்றவியல் சட்டம் தொடர்பான நிபுணரும் சர்வதேச நீதிக்கான கனேடியக் கூட்டாண்மையின் ஆய்வாளருமான அமன்டா கஹ்ரெமனி வலியுறுத்தியுள்ளார்.

தென்னாபிரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகளுக்கான நிலையம் மற்றும் இலங்கையில் ஜனநாயகத்துக்கான பத்திரிகையாளர்கள் ஆகிய இரு அமைப்புக்களுடனும் இணைந்து சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டத்தால் 'இலங்கையில் தண்டனையிலிருந்து பாதுகாப்புப்பெறும் போக்குக்கு எதிரான போராட்டத்தை வலுவூட்டுதல்' என்ற தலைப்பில் நிகழ்நிலைக் கலந்துரையாடல் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தடை விதிக்கப்படும்போது, அந்த நபருக்கு எதிராகத் திரட்டப்பட்ட ஆதாரங்கள் மற்றும் தடை விதிப்புக்கான காரணங்கள் தொடர்பில் சர்வதேச நாடுகளின் அரசாங்கங்கள்பரஸ்பரம்பகிர்ந்துகொண்டு ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும்.

நபர் ஒருவருக்கு எதிராகத் தடை விதிப்பது சட்டரீதியான நடவடிக்கை என்பதை விடவும், மனித உரிமைகள் சார் கடப்பாடுகள் முழுமையாக நிறைவேற்றப்படுவதற்கான அரசியல் மற்றும் இராஜதந்திர ரீதியிலான அழுத்தத்தை வழங்குவதை முன்னிறுத்தும் நடவடிக்கையாகும்.

நீதியை நிலைநாட்டுவதற்கான ஆயுதமாகத் தடை விதிப்பைப் பயன்படுத்த முடியும். அதேநேரம் சம்பந்தப்பட்ட நபருக்கெதிரான ஆதாரங்களைத் திரட்டுவதிலும், தடை விதிப்புத் தொடர்பான தீர்மானம் மேற்கொள்வதிலும் வெளிப்படைத்தன்மை வாய்ந்த செயன்முறை அவசியமாகும்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் சிவில் சமூகங்களால் திரட்டப்பட்ட ஆதாரங்களின்படி போர்க்குற்றங்களிலும், மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்டவர்களுக்கு எதிராக ஏனைய நாடுகள் தடைகளை விதிக்கமுடியும். இந்தத் தடை விதிப்புநடவடிக்கை மனித உரிமைகளை மையப்படுத்தியதாகவும், அது தொடர்பான தகவல்களை சிவில் சமூக அமைப்புக்களாலும், சர்வதேச கட்டமைப்புக்களாலும் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் அமையவேண்டும் - என்றார். (அ-எ-இ)

## தீர்மானங்களின்...

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 49 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் இந்த மாதம் 28ஆம் திகதி ஆரம்பமாகின்றது. அதில் இலங்கை தொடர்பான எழுத்துமூல அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் முன்வைக்கவுள்ளார். அந்த அறிக்கை மிகவும் காட்டமாக இருக்கும் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளரின் எழுத்துமூல அறிக்கையைப் பார்த்த பின்னரே அது தொடர்பில் எம்மால் பதிலளிக்க முடியும். எனினும், அந்த அறிக்கை இலங்கைக்குச் சவாலாக அமையாது என்றே நாம் நம்புகின்றோம்.

இந்த அறிக்கை எமக்குப் புதிய விடயம் அல்ல. அறிக்கைகள் அல்லது தீர்மானங்கள் மூலமாக இலங்கையைக் கட்டுப்படுத்த முடியாது. ஏனெனில் இலங்கை வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுகின்றது. சர்வதேசத்தைப் பகைக்க நாம் விரும்பவில்லை. சர்வதேசத்துடன் இணைந்து செயற்பட நாம் தயாராகவே இருக்கின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் எழுத்துமூல அறிக்கை வெளிவந்த பின்னர் இலங்கையின் நிலைப்பாட்டை மாநாட்டில் வைத்து அறிவிப்போம் - என்றார். (அ-எ-22)

## ஒன்றியம்....

மாணவர்கள் மேற்கொண்ட போராட்டத்தால் பல்கலைக்கழகச் செயற்பாடுகள் நேற்றுத் தடைப்பட்டன. பல்கலைக்கழக ஊழியர்கள், விரிவுரையாளர்கள் உள்நுழைய முடியாது வீதிகளில் காத்திருக்க வேண்டி ஏற்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களுடன் பேச்சு நடத்திய துணைவேந்தர் எஸ்.ஸ்ரீசற்குணராஜா, பரீட்சைகள் நடைபெறுவதால் பல்கலைக்கழக நுழைவாயிலைத் திறக்க வேண்டும் என்றும், இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் பேசுவதற்குச் சந்தர்ப்பம் வழங்க முடியும் என்றும் தெரிவித்தார்.

இருப்பினும் எழுத்தில் முன்வைத்த கோரிக்கை 4 மாதங்களாக நிறைவேற்றப்படவில்லை என்று தெரிவித்து மாணவர்கள் போராட்டத்தைத் தொடர்ந்ததால் பல்கலைக்கழகச் செயற்பாடுகள் தடைப்பட்டன. மாணவர்கள் போராட்டத்தை அடுத்து அந்தப் பகுதியில் பெரும் எண்ணிக்கையான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை நேற்று மாலை சந்தித்த துணைவேந்தர், மாணவர் ஒன்றியம் அமைப்பதற்கான உறுதிமொழியை வழங்கினார். அதையடுத்து மாணவர்கள் போராட்டத்தைக் கைவிட்டனர். (அ-எ-26-20-27)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராக அச்சுவேலியில் ஒப்பங்கள்

யாழ்ப்பாணம், பெப். 18

பயங்கரவாதத் தடை சட்டத்தை தடை செய்யக்கோரிய கையெழுத்துப் போராட்டம் அச்சுவேலி பிரதான பேருந்து நிலையத்தில் நேற்று இடம்பெற்றது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இளைஞர்கள், யுவதிகள் விசாரணை இன்றி கைதுசெய்யப்பட்டு நீண்டகாலமாக சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். மிகவும் மோசமான சட்ட ஏற்பாடுகளை கொண்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்ச்சியான கையெழுத்துப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இதன் தொடர்ச்சியாகவே நேற்று அச்சுவேலி பிரதான பேருந்து நிலையத்தில் கையெழுத்துகள் சேகரிக்கப்பட்டன. (ம-20)



## நிர்வாகத்தெரிவு

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் 2022ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத்தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது தலைவராக செ.சண்முகலிங்கம், செயலாளராக வை.ஆனந்த ஜெஸ்கரன், பொருளாளராக தெ.சுகிர்தன், உபதலைவராக க.ஜினதாஸ், உபசெயலாளராக சி.உமாகரன், நிர்வாக உறுப்பினர்களாக இ.ரூபன், இ.ஜெயக்குமார், ந.ரசிகரன், இ.கேசவேல், உ.சயந்தன், ச.விமல்ராஜ், அ.தேவகுமார், அ.அன்பழகன், த.மதனகுமார், பீ.ஜெயவிந்தன், எண்பார்வையாளராக க.தயாளன், காப்பாளராக ந.சண்முகராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-ரி1)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து நிலாவரை புத்தூர் றோட்டில் காணி விற்பனைக்கு. 16 பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
புன்னாலைகட்டுவன் சந்தியிலிருந்து 2 1/2 km தூரம் வாகையடி சந்தி.

**074 269 0854**

## பில் கிளாக் தேவை

வவுனியா நகர் புறத்தில் இயங்கும் எமது கடைக்கு கணினி அறிவுள்ள பில் கிளாக் தேவை. வயது எல்லை 18 தொடக்கம் 30 வரை. மாத வேதனமாக 17 000/- தொடக்கம் 25 000/- வரை வழங்கப்படும். (வவுனியாவில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)

(CS 18600A) (3/6) தொடர்பு : **077 311 2250**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மறவன்புலவு பகுதியில் மறவன்புலவு மத்தி அம்மன் கோயிலடியில் 4 பரப்புக் காணி புதிதாக அமைக்கப்பட்ட வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)
A-32 பிரதான வீதியில் இருந்து 600 m தூரம்.
பார்வையிடும் நேரம்:
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை.
தரகர் தேவையில்லை.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: **077 814 7389**
**077 117 8578**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 30 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 14 அடி பாதையுடன் தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்.
நிலப்பரப்பு
A-32 பிரதான வீதியில் இருந்து 500 m தூரம்.
பயன்தரும் 137 தென்னைகள் உள்ளன. நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன (பைப் லைனிங்). பார்வையிடும் நேரம்: காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை.
ஒரு பரப்பின் விலை 350,000/=
தரகர் தேவையில்லை.

தொடர்பு: **077 814 7389**
**077 117 8578**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 22 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
நிலப்பரப்பு
2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்
A-32 பிரதான வீதியில் இருந்து 400 m தூரம்.
பார்வையிடும் நேரம்:
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை.
ஒரு பரப்பின் விலை 300,000/=
தரகர் தேவையில்லை.

தொடர்பு: **077 814 7389**
**077 117 8578**

## பணிப்பெண் தேவை

யாழ். நகரில் உள்ள வீட்டில் தங்கியிருந்து பணியாற்றக் கூடிய பணிப்பெண் தேவை.

தொடர்பு: **076 560 1643**

## பெண் வேலையாள்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும்
எமது தொழிற்சாலைக்கு
**பொதி செய்வதற்கு**
பெண் வேலையாள்கள் தேவை.

வயது எல்லை : 18 - 35 வரை
வேலை நேரம் : காலை 7.30 மணி 5.00 மணிவரை
மாத வேதனமாக : 17000 /= தொடக்கம் 30000 /= வரை வழங்கப்படும்

(cs 18339)(2/6)

**074 049 0003**

## வெற்றித்தேர்வு வெளியீட்டகம் நடாத்தும்

### புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தும்

### 2022 - தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான

கடினமான வினாக்களை உள்ளடக்கி வெளிவரும் முதற்தர மாதிரி வினாப்பத்திரம்

வெற்றித்தேர்வு தொடர் போட்டிப் பரீட்சைகளும், வினாத்தாள்களை தெளிவுபடுத்தும் வினாவிடை வகுப்புகளும் ஆரம்பம்

பரீட்சை நாள் – ஞாயிற்றுக்கிழமை

பரீட்சை நிலையம் – நல்லூர் சயன்ஸ் அக்கடமி (முருகன் ஆலயம் முன்பாக)
பரீட்சை நேரங்கள் – காலை 6.00 - 8.15, காலை 8.30 - 10.45, காலை 11.00 - 1.15, மதியம் 1.30 - 3.45, மாலை 4.00 - 6.15

விரும்பிய நேரங்களில் பரீட்சைகள் எழுதலாம்

தரம் 3, தரம் 4, தரம் 5 முதலாவது பரீட்சை 20.02.2022

அனேக வெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க வெற்றித்தேர்வு பரீட்சை எழுதும் மாணவர்களின் மதிப்பீடு செய்யப்பட்ட வினாத்தாள்களை வெற்றித்தேர்வு வளவாளர்களால் தெளிவுபடுத்தப்படும்
விசேட வினாவிடை வகுப்புகள்

வினாவிடை வகுப்பு – சனிக்கிழமை
தரம் - 3 காலை 10.00 - 12.00, தரம் - 4 மதியம் 12.30 - 2.30, தரம் - 5 மாலை 3.00 - 5.30

முதலாவது வினாவிடை வகுப்பு 26.02.2022

பரீட்சைப் பெறுபேறுகள் தரப்படுத்தலுடன் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்படும்.
புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் வெற்றித்தேர்வு வெற்றியாளர்களாக கௌரவிக்கப்படுவர்.

### அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

"வெற்றித்தேர்வு வெற்றியாளர்களின் தெரிவு" 0775388471 0773126807

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த (19.01.2022) புதன்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது தாயார்

**அமரர் பரமநாதர் நாகேஸ்வரி (நாகம்மா)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (17.02.2022) வியாழக்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு காரைநகர் ஆலங்கன்று அந்தியேட்டி மடத்தில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (18.02.2022) வெள்ளிக்கிழமை பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து உடன்வந்து உதவிகள் செய்த நல் உள்ளங்களுக்கும், துண்டுபிரசுரம், இணையத்தளம், பத்திரிகை போன்றவை ஊடாக இரங்கல் தெரிவித்தவர்களுக்கும் தொலைபேசி ஊடாக ஆறுதல் கூறிய உள்நாட்டு வெளிநாட்டு உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் எமக்கு உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிவன் கோவில் வீதி, (புதுறோட்)
காரைநகர்.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.